மாநகராட்சி மன்றம்
மாநகராட்சி மன்றம்

பக்கங்கள் எட்டு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 பங்குனி 14 திங்கட்கிழமை (27 - 03 - 2000) VALAMPURI ஒலி: 99

### அன்ரன் பாலசிங்கத்தின் பேட்டிக்கமைய

# அரசு உடனடியுத்த நிறுத்தம் செய்து புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்கவும்!

## ஐ. தே. க. எம். பி. கொடித்துவக்கு வேண்டுகோள்

(கொழும்பு)

**இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்விற்குப் பேச்சுவார்த்தைகளை தமிழீழ விடுதலைப் புலிகளுடன் காலம் தாழ்த்தாது விரைந்து மேற்கொள்வதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டும்;**

**அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக அரசாங்கம் யுத்த நிறுத்த அறிவிப்பொன்றை வெளிப்படுத்த வேண்டும்.**

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன்பாலசிங்கம் இலண்டனிலிருந்து வெளியாகும் தமிழ் கார்டியனுக்கு அளித்தபேட்டி தொடர்பாக கருத்துத் தெரிவித்த ஐக்கிய தேசியக்கட்சி எம் பி யும்கட்சியின் பேச்சாளருமான கருணாசேன கொடித்துவக்கு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கருணாசேன கொடித்துவக்கு கருத்துத்தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது தமிழீழவிடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர்கலாநிதி

[8ஆம் பக்கம் பார்க்க]

### இனப்பிரச்சினை தொடர்பான தீர்விற்கு

# அரசியல் அமைப்பைமாற்ற அதிகாரம் அரசு-ஐ. தே. கட்சிகளுக்கு இல்லை!

## பூமிபுத்திரக் கட்சி தலைவர் தெரிவிப்பு

[கொழும்பு]

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக அரசியல் அமைப்பை சீர்திருத்தம் செய்ய வேண்டிய அதிகாரம் பொதுசன ஐக்கிய முன்னணி அரசுக்கோ ஐக்கிய தேசியக் கட்சிக்கோ இல்லை அரசியல் அமைப்பைமாற்றி அமைக்கும் அதிகாரம் சிங்கள பௌத்த மகாசங்கத்தினருக்குமட்டுமே உண்டு.

அரசியல்அமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக பொதுசன ஐக்கிய முன்னணிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையே இடம்பெற்றபேச்சு

(8 ஆம் பக்கம் பார்க்க)

# உப ஜனாதிபதி தெரிவானாலும் தமிழ் மக்களுக்கு பிரயோசனமில்லை

## தமிழ்க் கட்சிகள் கருத்து

அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தொடர்பான பொதுசன ஐக்கிய முன்னணி அரசுக்கும் முக்கிய எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான 4ம் கட்டப் பேச்சு வார்த்தைகள் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

இப் பேச்சுவார்த்தையின் போது 3ம் கட்டப் பேச்சுவார்த்தையின் போது இணக்கம் காணப்படாத விடயங்கள் தொடர்பாக பேச்சு

(8 ஆம் பக்கம் பார்க்க)

# கடற்படை ட்ரக்-ஓட்டோ மோதல் ஓட்டோ சாரதி பலி இருவர் காயம்!

## மருதானைப் பொலிஸார் விசாரணை

(கொழும்பு)

மருதானையில் கடற்படை வாகனம் ஒன்று ஓட்டோவுடன் மோதியதில் ஓட்டோ சாரதி ஸ்தலத்திலேயே பலியானார். ஓட்டோவில் வந்த மற்றும் இருவர் படுகாயங்களுடன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வாகனத்தில் வந்த ஆறு கடற்படையினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து சம்பவத்தை அடுத்து மருதானைப் பகுதி மக்களுக்கும் கடற்படையினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டதைத் தொடர்ந்து

(8 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் ஒருவருக்கு புலிகள் மரண தண்டனை

(ஏறாவூர்)

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தில் க, வேலன் (வயது 19) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

இவ்விளைஞர் புளொட் இயக்க உறுப்பினராக இருந்தவர் என்றும்கடந்த 6மாதங்

(8ஆம் பக்கம் பார்க்க)

# அம்புலன்ஸ் மூலம் 6நோயாளிகள் வவுனியா ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டனர்

(வவுனியா)

மல்லாவி அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளர்களில் ஆறுபேர் அம்புலன்ஸ் மூலம் வவுனியா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளையில் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட நோயாளர்கள் 26பேர் சுகமடைந்த நிலையில் வன்னிப் பகுதிக்கு அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(க-103)

# மட்டு-ஆரயம்பதி கோர விபத்தில் மூவர்பலி 33பேர் படுகாயம்:

[மட்டக்களப்பு]

நேற்றுக்காலை மட்டக்களப்பு மண்முனைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் ஆரயம்பதி 5ம் கட்டை என்ற இடத்தில் காலை 11 மணியளவில் இடம் பெற்ற பாரிய வீதிவிபத்து சம்பவமொன்றில் 3 பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

33 பேர் படுகாயமடைந்துள்ளனர். இவர்களில்10பேர் நிலை கவலைகிடமாகவுள்ளதாகமட்டக்களப்பு போதனா

(8ஆம் பக்கம் பார்க்க)

### வாகனங்கள் மூலம்

# தாக்குவதைத் தவிர்ப்பதற்காக புதிய இலக்கத் தகடுகள் அறிமுகம்

## அமைச்சர் பௌசி விளக்கம்

(கொழும்பு)

மோட்டார் வாகனங்கள் மூலமான தாக்குதல்களை தவிர்க்கும் நோக்குடன் மோட்டார் வாகனங்களுக்கு புதிய இலக்கத்தகடு வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

எதிர்வரும் மேமாதம் 1ம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# ஒரு சிப்பாய் பலி

(கல்முனை)

திருமலை கிண்ணியடியில் காவல் கடமையில் இருந்து திரும்பிக் கொண்டிருந்த இராணுவத்தினர் மீது நேற்று 7.50 மணியளவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு இராணுவச் சிப்பாய் கொல்லப்பட்டுள்ளார்.

## உள்ளே

யாழ் குடாநாட்டில் பிரதேச ரீதியாக சமுர்த்தி ஊக்குவிப்பாளராக நியமனம்பெற்று நிரந்தரமாக்கப்பட்டோர் பெயர் விபரம் பிரசுரமாகியுள்ளது.

(ஆ-ர்)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

கல்விச் சிறப்பு- ஒழுக்கம்- இறைபக்தி

# யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியின் மாட்சிமைக்கு 'உரமூட்டும் அம்சங்கள்

(தென்மராட்சி)

''யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி பல்வேறு சோதனைகள், வேதனைகள், தடைகளைத் தாண்டி 150 வருடங்களைப் பூர்த்தி செய்த நிலையில் உயர்ந்த நிலையில் இருக்கின்றது. இந்தக் கல்லூரியை நிறுவிய ஆண்டகை பெற்றக்கினி இதில் ஆங்கிலக் கல்வியை வளர்க்க வேண்டும் என்ற ஆர்வம் கொண்டிருந்தார். அதனால் வெளிநாடுகளில் இருந்து ஆங்கில ஆசிரியர்களை வரவழைத்து ஆங்கிலக் கல்வியை அபிவிருத்தி செய்தார். இக்கல்லூரியில் கல்விகற்ற மாணவர்கள் மத்தியில் நல்ல பண்பாடுகள், இறைபக்தி, ஒழுக்கம், விசுவாசம் போன்றவை மிளிர்ந்து காணப்பட்டமை இதன் சிறப்பம்சமாகும்''.

இவ்வாறு யாழ். ஆயர். மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் யாழ்ப்பாணம் பற்றிஸ்கல்லூரியின் 150 ஆம் ஆண்டு நிறைவு விழா தொடர்பான ஆரம்ப நிகழ்வின் போது உரையாற்றுகையில்குறிப்பிட்டார்.

கல்லூரியின் அதிபர் அருட்திரு. ஏ. ஐ. பேர்னாட் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அலமரித்தியாகிகள், சபைக்குருக்கள், அருட்சகோதரிகள் உட்பட பலர் சமூகமளித்திருந்தனர்.

ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது—

''இக்கல்லூரி தனது 150 ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாட முற்படுகின்ற வேளையில் இக் கல்லூரியின் வளர்ச்சியிலும், உயர்விலும் விசுவாசத்துடன் ஈடுபட்டிருந்த பல அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களை நாம் நினைவு கூருதல் வேண்டும்.

இந்தக் கல்லூரியின் கல்வியில் சிறப்பை உணர்ந்த தென்பகுதி மாணவர்கள் பலர் இங்கு வந்து தமது கல்வியைத் தொடர்ந்துள்ளனர். மேலும் யுத்த நடவடிக்கைகளின் போது எறிகணை வீச்சுகள், விமானத் தாக்குதல்கள் இப்பகுதியில் பரவலாக இடம்பெற்றிருந்த போதிலும் கல்லூரிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்பட இறைவன் அனுமதிக்கவில்லை என்பது உயர்ந்த காட்சியாகும் என்று குறிப்பிட்டார்,

இக்கல்லூரியின்150 ஆவது ஆண்டுவிழா பெரிய அளவில் மே, ஜூன் மாதங்களில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (சி-77)

## உத்தரவை மீறிய வாலிபருக்கு வழங்கப்பட்ட புதுமையான தண்டனை

[யாழ்ப்பாணம்]

தமது உத்தரவை மதித்து நடக்கவில்லை என்ற காரணத்தால் படையினர் வாலிபர் ஒருவருக்கு வழங்கிய புதுமையான தண்டனை ஒன்று பற்றி தெரிவிக்கப் படுகிறது.

வலிகாமம் தெற்கில் உள்ள முக்கிய சந்தைகளில் ஒன்றில் கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் சனக்கூட்டம் முட்டி மோதிய வேளை, இவ்விடத்தில் வாகனங்கள் நிறுத்தப் படக்கூடாது என்ற அறிவித்தல் பலகை வைக்கப்பட்டிருந்த இடத்துக்கு அருகில் தனது லாண்ட் மாஸ்டரை நிறுத்தியதாகப் பிரஸ்தாப வாலிபரை குறிப்பிட்ட பல கையை உயர தூக்கிப் பிடித்தபடி நிற்குமாறு படையினர் பணித்தனராம்.

கொளுத்தும் வெயிலில் அவ் வாலிபர் முகம் வெளிறி நின்ற அவமானமான நிலை பலரையும் மனம் வருந்தச் செய்ததாகவும் அவ் வாலிபர் தனது வாகனத்தை அவ்விடத்தில் நிறுத்தியது பற்றி எவரோ படையினரின் கவனத்திற்குக் கொண்டு வந்து தூண்டி விட்டதாகவும் கூறப் படுகிறது.

இதே வேளை மேற்படி சந்தைப் பகுதியில் வாகனங்களை நிறுத்தி வைக்கக்கூடிய இட வசதியிருக்கும் போதிலும் சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினர் இது விடயத்தில் இடம் ஒதுக்கிக் கொடுக்காத தன்மையில் செயற்பட்டு வருவது ,விசனத்திற்குரியது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## நியமனம்

(அரியாலை)

யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் கணக்காய்வு அத்தியட்சகராகக் கடமையாற்றிய திரு. சி. சண்முகம் ஓய்வுபெற்றதை அடுத்து அவரது இடத்திற்கு திரு. பெ. தம்பிராஜா நியமிக்கப்பட்டுள்ளார் [சி-84[

## மஹாநியாச இலக்ஷார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

நந்தாவில் அருள்மிகு முன்னனீஸ்வரர் ஆலய மஹாநியாச இலக்ஷார்ச்சனை கடந்த 29ந்திகதி ஆரம்பமாகி, தொடர்ந்து 28நாட்கள் வரை நடைபெற்று, இன்று திங்கட்கிழமை இலக்ஷார்ச்சனை பூர்த்தியும், நவோந்திர சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளது. (செ)

## பூர்த்தி நிலையில் முதலாம் கட்டம்

[அரியாலை]

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கோப்பாய்ப் பிரிவினால் நடாத்தப்பட்டு வந்த இலவச 'வானியலும் சோதிடமும்' கற்கைநெறியின் முதலாம் கட்டம் பூர்த்தியடைந்துவருகிறது.

இரண்டாம் கட்ட வகுப்புகள் மே மாதம் ஆரம்பமாக இருப்பதாகவும் இக்கற்கை நெறியில் இணைய விரும்பும் 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்,பெண் இருபாலாரும் பிரிவுக்காரியாலயத்தில் மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் பிரிவுச் செயலாளர் இ.மயில்வாகனம் தெரிவித்துள்ளார். (சி-106)

## சிறுப்பிட்டி வரை இ. போ. ச பஸ் சேவை ஏப்-1 முதல் விஸ்தரிப்பு

[வேலணை]

வட பிராந்திய போக்குவரத்துச் சபையால் இது வரை புங்குடுதிவு பெருங்காடு வரை நடாத்தப்பட்டு வந்த பேருந்து சேவை எதிர் வரும் முதலாம் திகதி தொடக்கம் சிறுப்பிட்டி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

சிறுப்பிட்டிக்கான பேருந்துச சேவையை நடாத்தக் கோரி தீவுப் பகுதி தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசமும் மற்றும் பொது அமைப்புக்களும் பொது மக்களும் வற்புறுத்தி வந்தனர்.

இச் சேவையால் இப்பகுதியில் வாழும் 300க்கும் மேற்பட்ட குடும்பங்கள் போக்குவரத்து வசதியைப் பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (சி)

## அரசு-ஐ.தே.க. பேச்சுவார்த்தை புதனன்று மீண்டும் தொடரும்

[கொழும்பு]

அரசியல்யாப்பு சீர்திருத்தம் தொடர்பாக அரசுக்கும் ஐக்கியதேசியக் கட்சிக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் எதிர்வரும் புதன் அன்று மீண்டும் இடம்பெறவுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் உடன்பாடு காணப்படாத விடயங்கள் மற்றும் பல முக்கிய விடயங்கள் பற்றி இப்பேச்சுவார்த்தையில் கலந்துரையாடப்படவுள்ளதாக அரசதரப்பு வட்டாரங்கள்தெரிவித்துள்ளன. [சி-9]

## தொலைபேசி இலக்க விபரத் திரட்டு இன்னமும் வழங்கப்படவில்லையாம்

[தென்மராட்சி]

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தொலைபேசிஇணைப்புக்கள் வழங்கப்பட்டவர்களுக்கு ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தினால் இதுவரை தேசிய மட்டத்திலான தொலைபேசி இலக்க விபரங்கள் அடங்கிய விவரத்திரட்டு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுவாகவே தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டவர்களுக்கு ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தால் வழங்கப்பட வேண்டியதுகட்டாயமாக இருந்தபோதிலும் கூட தொலைபேசி சந்தாதாரர்கள் புறக்கணிக்கப் பட்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகைய விவரக்கொத்து இல்லாமையினால்வெளியிடங்களில் உள்ள தொலைபேசி இலக்கங்களைப்பார்க்க முடியாமல் இருப்பதாகவும் அறியவருகிறது. [சி-77]

## பாதைச் சீர்கேடு: சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விழிதிறப்பது எப்போது?

(யாழ்ப்பாணம்)

யாழ். பலாலி பிரதான வீதியிலிருந்து ஊரெழூடாகசுன்னாகம் செல்லும் திலீபன் வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாதிருப்பதாக அதிருப்தி தெரிவிக்கப் படுகிறது.

சுன்னாகம் மின்சார நிலையம், சுன்னாகம் பிரதான சந்தை போன்ற இடங்களுக்கு மக்கள் குறுகிய நேரத்தில் பயணம் செய்ய இப் பாதையையே பயன்படுத்தி வருகின்றனர்.

சீரற்ற, மேடு, பள்ளம் நிறைந்த இப் பாதையால் செல்லும் சைக்கிள் பயணிகள் பலதட்வைகள் விபத்துக்குள்ளான, சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.

இச் சீர்கேட்டை நிவர்த்தி செய்ய சம்பந்தப்பட்டோரின் விழிதிறப்பது எப்போது என கேட்கப்படுகிறது? (சி)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர்.

யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு இம்மாதம் 26 ஆம் திகதிவரை பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவுஇலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாகத் தரப்படுகின்றது.

சாவகச்சேரி

| | |
|---|---|
| 126339 ஏ | 126339 பி |
| 126339 சி | 126339 டி |
| 129843 ஏ | 129843 பி |
| 129844 ஏ | 129844 பி |
| 129897 ஏ | 129897 பி |
| 129897 சி | 129897 டி |
| 129897 ஈ | 129897 எவ் |
| 129963 ஏ | 129963 பி |
| 129963 சி | 129963 டி |
| 131264 ஏ | 131300 ஏ |
| 131311 ஏ | 131311 பி |
| 131342 ஏ | 131387 ஏ |
| 131387 பி | 131387 சி |
| 131407 ஏ | 131410 ஏ |
| 131410 பி | 131418 ஏ |
| 131425 ஏ | 137384 ஏ |
| 137387 ஏ | 137387 பி |
| 137390 ஏ | 137390 பி |
| 137392 ஏ | 137392 பி |
| 137392 சி | 137392 டி |
| 137392 ஈ | 137392 எவ் |
| 137392 ஜி | 137396 ஏ |
| 137396 பி | 137396 சி |
| 137396 டி | 137396 ஈ |
| 137402 ஏ | 137402 பி |
| 137425 ஏ | 137425 பி |
| 137430 ஏ | 137431 ஏ |
| 137433 ஏ | 137433 பி |
| 137439 ஏ | 137439 பி |
| 137439 சி | 136439 டி |
| 137442 ஏ | 137443 ஏ |
| 137447 ஏ | 137453 ஏ |
| 137453 பி | 137461 ஏ |
| 137465 ஏ | 137465 பி |
| 137466 ஏ | 137466 பி |
| 137475 ஏ | 137475 பி |
| 137518 ஏ | 137522 ஏ |
| 137525 ஏ | 137529 ஏ |
| 137529 பி | 138532 ஏ |
| 137532 பி | 137532 சி |
| 137532 டி | 137533 ஏ |
| 137534 ஏ | 137556 ஏ |
| 137558 ஏ | 137558 பி |
| 139238 ஏ | 139238 பி |
| 139244 ஏ | 139255 ஏ |
| 139260 ஏ | 139260 பி |
| 139267 ஏ | 139283 ஏ |
| 139283 பி | 139284 ஏ |
| 139284 பி | 139284 சி |
| 139290 ஏ | 139290 பி |
| 139292 ஏ | 137296 ஏ |

| | |
|---|---|
| 139296 பி | 139301 ஏ |
| 139317 ஏ | 139323 ஏ |
| 139329 ஏ | 139333 ஏ |
| 139342 ஏ | 139347 ஏ |
| 139347 பி | 139347 சி |
| 139360 ஏ | 139360 பி |
| 139385 ஏ | 139385 பி |
| 139385 சி | 139386 ஏ |
| 139386 பி | 114325 ஏ |
| 114346 ஏ | 123279 ஏ |
| 123279 பி | 123279 சி |
| 123279 டி | 123279 ஈ |
| 129871 ஏ | 129871 பி |
| 129882 ஏ | 126917 ஏ |
| 130509 ஏ | 130509 பி |
| 130512 ஏ | 130512 பி |
| 130546 ஏ | 131406 ஏ |
| 131427 ஏ | 131427 பி |
| 131441 ஏ | 131441 பி |
| 131450 ஏ | 131446 ஏ |
| 131450 சி | 131450 பி |
| 131470 ஏ | 131450 டி |
| 191471 பி | 131471 ஏ |
| 131476 ஏ | 131473 ஏ |
| 131484 ஏ | 131480 ஏ |
| 131491 ஏ | 131489 ஏ |
| 131407 பி | 131497 ஏ |
| 131513 ஏ | 131518 ஏ |
| 131518 பி | 131518 சி |
| 131518 டி | 131521 ஏ |
| 131521 பி | 134906 ஏ |
| 134906 பி | 134906 சி |
| 134912 ஏ | 134924 ஏ |
| 134924 பி | 134924 சி |
| 134924 டி | 134984 ஏ |
| 134934 பி | 134935 ஏ |
| 134935 பி | 135440 ஏ |
| 135440 பி | 135410 சி |
| 135440 டி | 135442 ஏ |
| 135442 பி | 135447 ஏ |
| 135457 ஏ | 135457 பி |
| 135470 ஏ | 135470 பி |
| 135470 சி | 135470 டி |
| 135471 ஏ | 135662 ஏ |
| 135662 பி | 137451 ஏ |
| 137451 பி | 137554 ஏ |
| 137555 ஏ | 439181 ஏ |
| 139183 ஏ | 139183 பி |
| 139183 சி | 139189 ஏ |
| 139193 ஏ | 139195 ஏ |
| 1392[illegible]2 ஏ | 139204 ஏ |
| 139204 பி | 139209 ஏ |
| 139209 பி | 139209 சி |
| 139209 டி | 139213 ஏ |
| 139220 ஏ | 139222 ஏ |
| 139224 ஏ | 139946 ஏ |
| 139953 ஏ | 139953 பி |
| 139955 ஏ | 159955 பி |
| 139957 ஏ | |

## இராசி பலன்

27.03.2000

திங்கட்கிழமை

(தமிழுக்கு பங்குனி - 14)

ஸப்தமி மாலை 5.31 வரை, மூலம் அதிகாலை5.30 வரை, சித்தயோகம். இராகு காலம் காலை 8.13 முதல் 9.43 வரை, சுபநேரம், பகல் 12.44 முதல் 2.14 வரை.

**மேடம்:**
தவறிழைத்தல், அடிபணியாமை, தொழில் முடக்கம்.

**இடபம்:**
சபலபுத்தி, காரியதடை, ஏமாற்றம்.

**மிதுனம்:**
போட்டியில் ஜெயித்தல், தனவரவு, கலகலப்பு.

**கடகம்:**
பங்காளர் நட்பு, பொதுப் பணி, மாமனார் உதவி.

**சிங்கம்:**
அறிஞர்பகை, வாக்குத் தவறுதல், குழப்பம்.

**கன்னி:**
எதிர்பாராநட்பு, மனக் களிப்பு, குடும்பசுகம்.

**துலாம்:**
நோய்தணிவு, சயனசுகம், உறவினர் வருகை.

**விருச்சிகம்:**
இனசனவெறுப்பு, வேதாந்தம், உள்ளக்குமுறல்.

**தனுசு:**
தெய்வதரிசனம்,சுபகாரியச் செலவு, திருமணச்சிறப்பு.

**மகரம்:**
குறும்புத்தனம், புத்திரர் செலவு, துயரச்செய்தி.

**கும்பம:**
தொழில்லாபம், மறைமுக நட்பு, வீண்விரயம்.

**மீனம:**
சமயோசிதம், பெண்அறிவுரை, விரும்பியது கைகூடல்.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

-அனுஷியா

நல்லூர் ... மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

# ஆசிரியர் நியமன கடிதங்கள் பெறாதோருக்கு 'அவற்றை வழங்க நடவடிக்கை

## இ. த. ஆ. சங்க செயலர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அரசாங்கப் பாடசாலைகளில் 1979ம் ஆண்டிற்கு முன்பு நியமனம் பெற்று முறையான நியமனக்கடிதங்களைப் பெறாத அல்லது நிரந்தர நியமனக்கடிதங்களைத் தவறவிட்ட ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனக் கடிதம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்க துணைப் பொதுச்செயலாளர் திரு. த. பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார்.

முறையான நிரந்தர நியமனக் கடிதம் இல்லாதவர்கள் தாங்கள் கடமை புரியும் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அதிபரூடாக விண்ணப்பத்தை அனுப்பி அதன் பிரதியை கல்வி அமைச்சின் செயலாளருக்கும் அனுப்புமாறும் நிரந்தர நியமனக் கடிதம் கிடைத்ததும் அவர்கள் பதவியில் உறுதிப்படுத்தப் படுவார்களெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (வ)

# யாழ். செயலக வேலை வங்கி செயற்பாடுகள் ஸ்தம்பிதம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் அரச செயலகத்தில் ஆரம்பிக்கப்பட்ட வேலை வங்கி செயலிழந்த நிலையில் இப்போது உள்ளது எனத்தெரிவிக்கப்படுகிறது.

மாவட்டத்தில் வேலையற்ற இளைஞர், யுவதிகள் மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் இவ்வங்கியில் தமது பெயர்கள் மற்றும் கல்வித்தகமைகளைப் பதிவுசெய்திருந்தனர் ஆயினும் இவ்வங்கி செயலிழந்த நிலைக்குத்தள்ளப்பட்டு விட்டதால், வேலையற்று இருக்கும் இளைஞர், யுவதிகள் மத்தியில் விரக்தி நிலை ஏற்பட்டுள்ளது

அதேவேளை இவ்வேலை வங்கி செயல்படாமையினால், வேறு எங்கு வேலை தேடலுக்குரிய பதிவுகளை மேற்கொள்வது என்பது தெரியாத நிலையில் இப்பகுதி இளைஞர், யுவதிகள் உள்ளனர். (சி-77)

# பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் இதுவரை 10 ஆயிரம் தென்னை மரங்கள் தறிப்பு

(தென்மராட்சி)

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் பல்வேறு தேவைகளுக்காகவும் இதுவரை சுமார் 10 ஆயிரம் தென்னை மரங்கள் தறிக்கப்பட்டு விட்டதாக தென்னை அபிவிருத்திச் சபையின் உத்தியோகத்தர் எஸ். தனிநாயகம் தெரிவித்துள்ளார்.

இப்பிரதேசத்தில் 15 ஆயிரம் ஏக்கரில் தென்னைச் செய்கை முன்பு மேற்கொள்ளப்பட்ட போதிலும் தற்போதைய நிலையில் பல தென்னந் தோட்டங்கள் பராமரிப்பு இன்றி உள்ளன.

தென்னந் தோட்டங்களின் உரிமையாளர்களில் பலர் தென்பகுதிக்கும் வெளிநாடுகளுக்கும் சென்றுள்ளதாகத் தெரியவருகின்றது.

மேலும் தென்னை மரங்கள் பெருமளவில் தறிக்கப்பட்டதால் கரந்தாய் பகுதி இப்போது பாலைவனமாகக் காட்சியளிக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார். (சி-77)

# இரட்டைக் கொலைக்கு வித்திட்ட பெண் கடத்தல்

(கொழும்பு)

பெண் கடத்தல் விவகாரம் ஒன்று இரட்டைக்கொலைக்கு வழி வகுத்து விட்டதுடன் சம்பவங்கள் பற்றித் தெரிவிக்கப்படுகிறது,

இது பற்றித்தெரியவந்துள்ளதாவது உல்வலை என்ற இடத்தைச் சேர்ந்த ஹேவாகமகே சிறிபால (வயது 52) என்ற இளைப்பாறிய பொலிஸ் அதிகாரியின்மகளை வாலிபர் ஒருவர் கடத்திச் சென்று வீடொன்றில் மறைத்து வைத்திருந்தார். பிரஸ்தாப யுவதியை மீட்ட பொலிஸார் அவ்வாலிபருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

அவ் வழக்கில் சமூகமளித்து விட்டு மகளுடன் வீடு திரும்பிய தந்தை சுட்டுக்கொலை செய்யப்பட்டார். பிரஸ்தாப வாலிபரே இக் கொலையைப் புரிந்ததாகச் சந்தேகிக்கப்படுகிறது.

இக் கொலைக்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக அவ் வாலிபரின் சகோதரியான பி. தம்மி தனுஷா என்ற யுவதி இனந்தெரியாதோரால் வெட்டிக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# நெடுந்தீவு பாடசாலைகளின் மலசலகூட அமைப்புப்பணிகள்

[நெடுந்தீவு]

நெடுந்தீவின் பிரதான பாடசாலைகளான மகாவித்தியாலயம் சைவப்பிரகாச வித்தியாலயம், றோ.க. பெண்கள் வித்தியாலயம், சிக்கிரியான் பள்ளம் அ.த.க பாடசாலை போன்றவற்றுக்கு மலசலகூடம் அமைப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான மூலப் பொருட்களை சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனமே வழங்கியதென்பது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை ஏனைய சிறிய பாடசாலைகளிலும் மலசலகூடம் காத்திரமற்ற தன்மையிலே இருந்துவருகின்றது. எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி-82)

# பனையிலிருந்து இறங்கியவர் பாம்புக்கடிக்கு இலக்கானார்

பனைமரத்திலிருந்து இறங்கிய சமயம் மரத்தின் அடியிலிருந்த பாம்பு தீண்டி நபர் ஒருவர் மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உடுப்பிட்டி இமையாணனைச் சேர்ந்த முருகன் தேவராஜா (வயது 39) என்பவரே கடியுண்டவராவார்.

மந்திகை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அவசர நோயாளர் சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (சி)

---

காடிகாமம் சந்தையில்

# புனரமைக்கப்பட்ட குடிநீர் விநியோகத் திட்டம் ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

ஜேர்மன் குடியரசு தொழில் நுட்ப நிறுவனத்தினால் பிரிட்டிஸ் உயர் ஸ்தானிகராலயத்தின் உதவியுடன் கொடிகாமம் சந்தையில் புனரமைக்கப் பட்ட குடி நீர் விநியோகத் திட்டம் அண்மையில் பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகர் மதிப்புக்குரிய செல்வி. லிண்டா அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது

பிரிட்டிஷ் தூதுவரின் பாதுகாப்பு உயர் அதிகாரியும் உதவி செயலாளர்களும் யாழ். மாவட்ட ஜீ ரி. சற் அமைப்பின் பிராந்திய பொறியியலாளர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். மேலும் சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் கு. ந. பாலசசந்திரன், உத்தியோகத்தர்கள் கச்சாய் உப - அலுவலக பொறுப்பதிகாரி இ.து. சிவராசா, வரணி உப-அலுவலகப் பொறுப்பதிகாரி திருமதி கு. யோகேஸ்வரி வர்த்தக சங்க பிரமுகர்கள். ஏனைய ஸ்தாபனங்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர் இந்நிகழ்விற்கு சாவகச்சேரி பிரதேசசபைத் தலைவர் அன்ரன் பொன்னையா தலைமைதாங்கினார். (சி)

# இன்று தென்மராட்சியில் நடமாடும் செயலகச் சேவை நிகழும்

தென்மராட்சி பிரதேசச் செயலகம் 2000ஆம் ஆண்டு முதல் மாதந்தம் வெவ்வேறு பகுதிகளில் தமது நடமாடும் பிரதேசசெயலக சேவையை ஆரம்பித்து நடாத்த திட்டமிட்டுளது.

இதன் முதற்கட்டமாக எழுதுமட்டுவாள் தெற்கு, மிருசுவில் வடக்கு, மிருசுவில் தெற்கு ஆகிய நான்கு கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கு உட்பட்ட மக்களின் பிரச்சினைகளுக்கும் கேள்விகளுக்கும்பதிலளிக்குமுகமாக இன்று திங்கட்கிழமை காலை 9மணி முதல் மாலை 4மணி வரை படித்த மகளிர் திட்டத்தில் தமது சேவையை மேற்படி செயலகத்தில் ஆற்றுகின்றார்கள்

இதில் உணவு கட்டுப்பாடு சமூசேவை, காணி, பிறப்பு, இறப்பு பதிவுகள் ஓய்வூதிய அடையாள அட்டை திட்டமிடல் போன்ற பல விடயங்கள் பற்றி பிரதேசச் செயலர் எஸ். சுந்தரம் பிள்ளையால் விளக்கமளிக்கப்பட்டது. [சி-45]

# குறிகாட்டுவான் பாலம் முழுமையாக திருத்தப்படவில்லை என அதிருப்தி

குறிகாட்டுவான் பாலமுகப்புப் பகுதி நீண்டகாலமாகச் சிதைவடைந்துள்ளது. நயினை நாகபூஷணி அம்மன் கோவிலுக்குச் செல்லும் பக்தர்களும் நெடுந்தீவு, அனலைதீவு போன்ற இடங்களுக்குச்செல்லும் பிரயாணிகளும் இப் பாலத்தினூடாகவே செல்வது வழக்கம்.

தற்சமயம் பனம் குத்திபோட்டு சீர் செய்திருப்பினும் நீண்ட நாள் பாவனைக்கு இது பொருத்தமற்றது என்றே அறியமுடிகிறது இற்றைவரை இப்பாலத்துக்கு எதுவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் சம்பந்தப்பட்டவர்கள் எடுக்கவில்லையென பிரயாணிகள் விசனம் தெரிவிக்கின்றனர். [சி32]

# வலி-தெற்கு பிரதேச சபையால் டக்ளஸ் எம்.பி. 'பெயரில் நிதியம்

(இணுவில்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் கீழ் உள்ள சனசமூக நிலையங்களுடன் இணைந்து இயங்கும் பாலர் பாடசாலைகளின் முன்னேற்றத்தைகருதி பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு மாதாந்த வேதனம் வழங்கும் முகமாக புதிய நடவடிக்கை ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

வலி-தெற்கு பிரதேசசபை தலைவர் திரு. மா. செல்வர்ாசா தனது சபைநிதியிலிருந்து 20 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

''டக்ளஸ் தேவானந்த பாலர் பாடசாலை நிதியம்' என்னும் பெயரில் கணக்கு ஒன்று சுன்னாகம் மக்கள் வங்கி கிளையில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிதியில் இருந்து மாத மாதம் பெறப்படும் வட்டி மூலம் ஆசிரியர்களுக்கு வேதனம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது, (சி-49)

# பணிகள் துரிதம்

[அச்சுவேலி]

நீர்வேலி வடக்கு சிவசக்தி சனசமூக நிலையக் கட்டட நிர்மாணிப்புக்கென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிச் செயலாளர் நாயகமும், யாழ். எம். பி.யுமான டக்ளஸ் தேவானந்தாவினால் ஒதுக்கப்பட்ட 75 ஆயிரம் ரூபா நிதி மூலம் கட்டடப்பணிகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. [சி57[

# அரியாலைப் பகுதி விதவைகள் விபரம் இன்று திரட்டப்படும்

[அரியாலை]

அரியாலை தென்மேற்கு ஜே 93 கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் விதவைகள் தொடர்பான விபரங்கள் சமூக சேவை உத்தியோகத்தினரால் திரட்டப் படவுள்ளன.

எனவே சம்பந்தப்பட்டோரை இன்று 27ஆம் திகதி திங்கட்கிழமை காலை தமது அலுவலகத்திற்கு வருமாறு கிராம அலுவலர் கேட்டுள்ளார்.

# மறை மாவட்ட ஏடு வெளியீடு

(தென்மராட்சி)

யாழ். மறை மாவட்டத்தின் இவ்வாண்டுக்குரிய தவக்கால கல்வித்திட்டமாக 'அடிமைத் தளைகளை உடைத்தெறிவோம்' எனும் ஏட்டினை மனித முன்னேற்ற நடுநிலையம் (கியூடெக்) வெளியிட்டுள்ளது.

தவக்காலத்தின் ஐந்து ஞாயிற்றுக்கிழமைகளிலும் வாசித்துத் தியானிக்கக் கூடிய கருத்துக்களும் ஞாயிறு வழிபாட்டு வாசகங்களின் சிந்தனைகளும் இந்த ஏட்டில் இடம் பெறுகின்றன. (சி-77)

# முழுநேர மின்விநியோகம்

தென்மராட்சிக்கான 24 மணிநேர மின் விநியோகம் வழங்கப்பட்டதை தொடர்ந்து கைதடி சந்தி கண்டி வீதியில் இருபத்திரண்டு தானியங்கி இரவு வெளிச்ச மின் குமிழ்கள் பொருத்தப்பட்டுள்ளன.

சோலார்கள் இணைக்கப்பட்ட இம்மின் குமிழ்கள் இரவு வேளைகளில் ஒளிர்ந்து பகலில் தானாக அணையக் கூடியவை.

மேலும் சாவகச்சேரி நகர்ப்பகுதிகளிலும் இத்தகைய மின்குமிழ்கள் விரைவில் பொருத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (21-சி)

# இந்தியாவுடன் பேச்சு நடத்த தயார் என்கிறார் பாக்-தலைவர்

## கிளிண்டன் நடுநிலைக்கு மறுப்பு

(இஸ்லாமபாத்)

இந்தியாவுடன் பேச்சு வார்த்தை நடத்த எந்த நேரமும் தாம் தயாராக இருப்பதாக பாகிஸ்தான் இராணுவ ஆட்சித் தலைவர் ஜெனரல் முஷாரப் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கு மிடையில் பேச்சுகள் நடைபெறும் போது அமெரிக்கா நடு நிலை வகிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

பாகிஸ்தானுக்கு விஜயம் செய்த அமெரிக்க அதிபர் பில் கிளின்டனுடன் ஏற்பட்ட சந்திப்பின் பின்னரே ஜெனரல் முஷாரப் இவ் வேண்டுகோளை விடுத்தார்.

இதேவேளை அமெரிக்க அதிபரின் தொலைக் காட்சி உரையில் இந்தியாவும் பாகிஸ்தானும் காஷ்மீர் பிரச்சினையைத் தங்களுக்குள் பேசித் தீர்க்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். என்பது குறிப்பிடத்தக்கது.

(து-சி)

# பஞ்சாப்பில் நெஞ்சுருக்கும் நிகழ்வு ஒரே குடும்பத்தில் 11 பேர் தற்கொலை

(புதுடில்லி)

பஞ்சாப் மாநிலத்தில் ஒரே குடும்பத்தைச்சேர்ந்த 11 பேர் கூட்டாகச் சேர்ந்து தற்கொலை புரிந்துள்ளனர்.

வடன்பால் என்ற கிராமத்தின் தலைவர் மற்றும் அவரது மூன்றுபிள்ளைகள், உறவினர்கள் ஆகியோரே இவ்வாறு தம்மைத்தாமே மாய்த்துக் கொண்டவராவர்.

நஞ்சுவில்லைகளை அருந்தியே அனைவரும் இறந்திருக்கலாம் என்று நம்பப்படுகின்ற போதிலும், இவர்கள் அனைவரும் இவ்வாறானதோர் துன்பமுடிவை நாடியமைக்கான காரணம் என்னவென்பது இன்னமும் புலனாகவில்லை.

இதுதொடர்பான பொலிஸ் விசாரணைகள் தொடர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம்,

மேற்படி பகுதியில் கடன் தொல்லை காரணமாக இவ்வாறு கூட்டாகச் சேர்ந்து வாழ்வை முடித்துக்கொள்ளும் சம்பவங்கள் அண்மையில் அதிகரித்திருப்பதாக மேலும் தெரியவருகிறது.

(சி-9-7)

# காஷ்மீர் அருகே இந்திய விமானம் வீழ்ந்து நொருங்கியதாக அறிவிப்பு

## விமானிகள் உயிர்தப்பினர்

(புதுடில்லி)

இந்திய விமானப்படைக்குச் சொந்தமான மிக் 23 ரக போர் விமானம் ஒன்று காஷ்மீர் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டின் இந்தியப் பக்கத்தில் வீழ்ந்து நொருங்கியதாக விமானப்படையினர் அறிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டில் இந்திய, பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே கடுமையான மோதல் இடம்பெற்ற இடமான கார்கில் பகுதியிலேயே இவ்விமானம் வீழ்ந்துள்ளது.

எனினும் விமானிகள் அனைவரும் விமானத்தில் இருந்து பாதுகாப்பாக மீண்டுள்ளனர்.

இதற்கிடையில் இந்திய, பாகிஸ்தான் படைகளுக்கிடையே இடம்பெற்ற மோதல்களின் போது இவ்விமானத்தை பாகிஸ்தான் படைகள் சுட்டு வீழ்த்தியிருக்கலாமென ஊர்ஜிதமற்ற சில செய்திகள் தெரிவித்துள்ளன.

(சி-9)

# சிங்கப்பூரில் மின் தடையால் நகரின் செயற்பாடு ஸ்தம்பிதம்

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் திடீரென ஏற்பட்ட மின்தடை காரணமாக சில மணிநேரம் நகரின் பல பகுதிகள் ஸ்தம்பித நிலை அடைந்தன.

பலவெளிநாட்டு உள்நாட்டு வங்கிகள், வர்த்தக நிலையங்கள், தொழிற்சாலைகள் ஹோட்டல்கள் என்பன சில மணிநேரம் இயக்கம் குறைந்து காணப்பட்டதாகச் செய்திகள் கூறுகின்றன.

[து]

## பொய்ப்புகார் செய்வதில்

# பெண்கள் முன்னணி வகிக்கின்றனர் சிங்கப்பூர் பொலிசார் தெரிவிப்பு

[சிங்கப்பூர்]

சிங்கப்பூரில் பெண்கள் பொய்ப் புகார்கள் தெரிவிக்கும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரிப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பொலிஸார் மேலும் தெரிவிக்கையில்;

இதனால் உண்மையான வழக்குகளுக்கு நேரத்தைச் செலவிட முடியாமல் போகின்றதெனவும் வீணான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டி இருப்பதாகவும் பொலிஸ். தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

பொய்ப் புகார் அளித்தாலும் பொலிஸார் விசாரணை நடாத்த வேண்டியுள்ளது. பாதிப்படைந்ததாகக்கூறப்படும் பெண் அவரது குடும்பத்தார், நண்பர்கள் மற்றும் இதர சாட்சியங்களிடம் பல மணி நேரம் விசாரிக்க வேண்டியுள்ளது. பல மாத விசாரணைகளுக்குப் பிறகே உண்மை புலனாகிறது.

1999 இல் மட்டும் புலனாய்வுக் குழுவினர் இவ்வாறான 124 பொய்ப் புகார்களை விசாரித்துள்ளனர்.

இதன் காரணமாக பொய்ப் புகார் தெரிவிப்போருக்கு 6 மாதச் சிறைத் தண்டனையும் 30 ஆயிரம் ரூபா அபராதம் என்னும் புதியசட்டம் அங்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

(க-9)

குழந்தைகள் உட்பட 11 பேர் மரணம்

# கண்ணீர்ப் புகை தவறுதலாக வெளிப்பட்டதன் விபரீத விளைவு

(பிறிடோறியோ)

தென்னாபிரிக்காவில் டர்பன் நகரத்தில் நடனமாடும் இடமொன்றில் தற்செயலாகக் கண்ணீர்ப்புகை வெளிப்பட்டதால் நெரிசலில் சிக்கிய இந்திய வம்சாவளிக் குழந்தைகள் 11 பேர் பலியாகியதாகவும் 44 பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது; ஆயிரக் கணக்கான குழந்தைகள் தங்களது பாடசாலை ஆண்டிறுதி விழாவைக் கொண்டாட குழுமியிருந்த போதே இப்பரிதாபகரமான சம்பவம் நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இறந்தவர்கள் 11-18 வயதிற்குட்பட்ட மாணவர்கள் எனவும் காயமடைந்தவர்களில் ஐவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(சி-5)

# வருடந்தோறும் 2 மில்லியன் பேர் உலகில் காசநோய்க்குப் பலி

ஒவ்வோராண்டும் 2 மில்லியன் பேர் காசநோய்க்கு இலக்காகி பலியாவதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற உலகளாவிய காசரோக தினத்தை முன்னிட்டு உலக சுகாதாரஸ்தாபனம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

உலக நாடுகளில் அதிகம் பரவும் நோயாக காசநோய் இனம் காணப்பட்டுள்ளது தற்போது இந்நோய் பரவல் 50 வீதத்தினால் அதிகரித்துக் காணப்படுகிறது.

இந்நோயின் தாக்கத்தினை உலகத்தில் இருந்து பூரணமாக கட்டுப்படுத்த ஆயிரத்து 11 கோடி டொலர் தேவைப்படுகிறது,

காசநோய்ப் பிரச்சினையை எதிர்த்து எடுக்க வேண்டிய அவசர நடவடிக்கைகளுக்கென உடனடியாக முந்நூறு மில்லியன் டொலர் தேவையாக உள்ளது.

இதனை உலகத்தில் இயங்கும் பொது நிறுவனங்கள் வழங்கி சாவின் விளிம்பில் நிற்கின்ற உலக மக்களைக் காக்க முன்வரவேண்டும்.

(சி-9)

## சர்வதேச விருது

கலிபோர்னியாவில் சான்டாகிளாரிடாவில் நடந்த சர்வதேசத் திரைப்பட விழாவில், ஆண்டின் சிறந்த கார்டூன் படவிருது, இராமாயணத்தை ஆதாரமாகக் கொண்ட ''வாலியர் பிறின்ஸ்'' என்றபடத்திற்கு கிடைத்துள்ளது.

பிரபல படத்தயாரிப்பாளர் கிருஷ்ணாஷா தயாரித்த இந்த 90 நிமிடப்படம் 60 படங்களில் இருந்து தெரிந்து எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(சி-05)

# புதிய நிதியமைப்பைக்கிழக்காசிய நாடுகள் உருவாக்குவதால் பாதிப்பில்லை

கிழக்காசிய நாடுகள் தங்களுக்குள் புதிய நிதியமைப்பை உருவாக்குவதால் பன்னாட்டு நிதியத்திற்கோ, அமெரிக்க ஐரோப்பிய நாடுகளுக்கோ பாதிப்பு ஏற்படாது என்று தெரிவிக்கப்படுகிறது.

புறூணையில் நடைபெற்ற கிழக்காசிய நாடுகளின் அமைச்சர்கள் கூடிய நிதிய மகாநாட்டில், கிழக்காசிய தென் கிழக்காசிய நாடுகளுக்கு நிதி நெருக்கடிவந்த போது இப்படியான அமைப்புகள் உருவாகின என்றும் 1997 இல் ஜப்பானுக்கு நிதி நெருக்கடி ஏற்பட்டபோது பன்னாட்டு நிறுவனம் பாதிக்கப்படும் என்று அமெரிக்க ஐரோப்பிய நாடுகள் எதிர்த்தன என்றும் தெரிவிக்கப்பட்டது.

மகாநாட்டில் தொடர்ந்து இந்த நிதி அமைப்பினால் கிழக்காசிய நாடுகள் நன்மை அடையுமென்றும் அதே வேளை பன்னாட்டு நிதி நிறுவனத்துக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாதென்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை தென்னாசிய நாடுகள் பன்னாட்டு நிதியத்திடம் செல்லத் தேவையில்லையென்றும் தாங்களே இந்த நிதியத்தின்மூலம் உதவிகளைப்பெற்றுக் கொள்ளலாமென்றும் புறூணை மகாநாட்டில் கூறப்பட்டது.

(து-கி)

# உலக தரிசனம்

## செய்திக் குவியல்

★ தாய்வான் ஜனாதிபதி கட்சித் தலைவர் பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

★ செச்சினியாவில் ஜனாதிபதி தேர்தலுக்கு முன் அங்கிருக்கும் கிளர்ச்சியாளர்களின் பலத்தை அடக்க அரசு முனைந்துள்ளது.

★ அமெரிக்கா ஈரானுடன் தொடர்புகளை வைத்துக் கொள்ள இப்பொழுது நினைப்பது காலங் கடந்த செயலென்று ஈரானின் பிரதான தலைவர் ஆய்துல்லாக் கமீனி தெரிவித்துள்ளார்.

★ இந்தியாவின் மிக் விமானம் ஒன்று பாக் எல்லையில் இந்தியக் கட்டுப்பாட்டுக் கோட்டுக்குள் விழுந்து நொருங்கியது.

★ பாகிஸ்தான் ஜனநாயகத்துக்குத் திரும்ப வேண்டும் என்று அமெரிக்க அதிபர் பில் கிளின்டன் தெரிவித்தார்.

[து]

# மொனிக்கா மனநிலை பாதிப்பு தனிமையில் சிரிக்கிறார், அழுகிறார்

(லண்டன்)

அமெரிக்க ஜனாதிபதி பில்கிளின்டனுடன்இணைத்து பரபரப்பாகப் பேசப்பட்ட மொனிக்கா தற்போது மனநிலை பாதிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பொது இடங்களில் இவர் விசித்திரப் போக்கில் நடந்து கொள்கிறாராம்.

மொனிக்காவுக்கு விரைவில் பைத்தியம் பிடித்து விடும் போலிருக்கிறது. என அவரது தோழி ஒருத்தி கூறுகிறார்.

தனிமை மற்றும் விரக்தியில் வாடும் மொனிக்கா இப்போதெல்லாம் தனிமையில் வாய்விட்டுச் சிரிக்கிறார், தனிமையில் பேசுகிறார், அழுகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தலை சிறந்த மருத்துவர் ஒருவர் மூலம் மொனிக்காவுக்கு மனோதத்துவச் சிகிச்சை வழங்கப்படுகிறது.

(சி)

# சர்வதேசத் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமெரிக்காவில் அமைக்கப்படும்

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் வசிக்கும் தமிழர்கள் சிலர் சேர்ந்து சர்வதேசத் தமிழ்ப்பல்கலைக் கழகம் ஒன்றை வாஷிங்டனில் அமைப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தப் பல்கலைக் கழகத்தின் நிறுவனத் தலைவர் செல்வின் குமார் கோயமுத்தூரில் பேசுகையில் சாலமன் தீவுகளில்30 இலட்சம் டொலர் செலவில் இந்தப் பல்கலைக் கழக வளாகம் உருவாகும் என்றார்.

''அபினா சிலிங்டன்'' என்னும் பெயரால் இப்பல் கலைக்கழகம் அழைக்கப்படும் எனவும், இங்கு மேடைக்கலைகள், அறிவியல், சுற்றுச்சூழல் ஆய்வு ஆகிய துறைகளில் பயிற்சி வழங்கும் நிகழ்ச்சிப் பரிவத்தனை மற்றும் பாரம்பரிய படிப்புகளும் நடக்கும் எனவும், அடுத்த இளவேனிற் காலத்தில் இருந்து இப்பல் கலைக்கழகம் இயங்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(சி-5)

யாழ்ப்பாணம்

# யாழ். குடாநாட்டில் பிரதேச ரீதியாக சமுர்த்தி ஊக்குவிப்பாளர் நிரந்தர நியமனம் பெற்றோர்

யாழ். மாவட்டத்தில் சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களாக நிரந்தர நியமனம் பெற்றோர் பற்றிய விவரங்கள் அடங்கிய பட்டியல் இங்கு தரப்படுகின்றது. (ஆ-ர்)

சுப்பிரமணியம் சுபநாதன், பொன்னையா வீதி, ஆனைக்கோட்டை ஜே/99 வண்ணார் பண்ணை வடமேற்கு.

ஸ்ரீபதிநாதன் கோபிநாத், 117 ஏ, பலாலி வீதி, திருநெல்வேலி. ஜே /110, திருநெல்வேலி மேற்கு.

ஏ. பிரபாகரன் கேணியடி, திருநெல்வேலி கிழக்கு. யாழ்ப்பாணம், (ஜே/111,திருநெல்வேலி மத்தி தெற்கு).

ஆர். தர்மிலா வேலைப்பிள்ளை கோவிலடி திருநெல்வேலி கிழக்கு (ஜே/112 திருநெல்வேலி தென்மேற்கு).

கே. விஜி 297/9, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம், ஜே/123கொக்குவில்தென்கிழக்கு)

செல்வராஜா விஜயகுமாரி சுதுமலை மேற்கு, மானிப்பாய், (ஜே/129 சுதுமலை வடக்கு)

கந்தசாமி சண்முகநாதன், கலைவாணி வீதி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு, (ஜே/145, வடலியடைப்பு).

தர்மலிங்கம் அஜெந்திரன் சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பு,(ஜே/149, சில்லாலை தெற்கு).

ரட்ணம் கலைச்செல்வி வில்வளை, மாதகல், (ஜே/151, மாதகல் தெற்கு),

லலிதா தம்பிராஜா 'கணேசசோமா வாசம்' கட்டுடை, மானிப்பாய், (ஜே/153, பெரியவிளான்).

சின்னராஜா கருணன் வைத்தீஸ்வரா வீதி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய். (ஜே/263 உரும்பிராய் மேற்கு)

செல்லத்துரை காந்தரூபி உரும்பிராய் வடக்கு, மடத்தடி. (ஜே/264 உரும்பிராய் வடக்கு)

சபாரட்ணம் மங்களேஸ்வரி பூதர்மடம், கோப்பாய் வடக்கு, கோப்பாய். (ஜே/270 நீர்வேலிமேற்கு)

நடராஜா கல்பனா சிறுப்பிட்டி மத்தி சிறுப்பிட்டி (ஜே/271 சிறுப்பிட்டி கிழக்கு)

பரந்தாமன் கீதாஞ்சலி நாவற்காடு, அச்சுவேலி (ஜே/275 நவக்கிரி)

ஜி. ஞானசம்பந்தன் சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலி. (ஜே/278 புத்தூர் கிழக்கு)

தம்பிதுரை கேதீசன் அச்செழு, நீர்வேலி (ஜே/279, அச்செழு)

முத்தையா பத்மநாதன் வாதரவத்தை, புத்தூர். (ஜே/280 வாதரவத்தை)

மாணிக்கம் சந்திரசேகரம் ராக்கை வீதி, வளலாய், அச்சுவேலி. (ஜே/284 வளலாய்)

செல்வராஜா பிறேமதாஸ் அச்சுவேலிவடக்கு அச்சுவேலி (ஜே/285 அச்சுவேலி வடக்கு)

ராஜ்குமார் விஜியகுலமணி ரி. குணராஜா நாவற்காடு தெற்கு அச்சுவேலி (ஜே/286 அச்சுவேலி தெற்கு)

சிவலிங்கம் சிவதரன் வட்டுக்கோட்டை தென் மேற்கு, வட்டுக்கோட்டை. (ஜே/166 வட்டுக்கோட்டை தென் மேற்கு)

விநாயகமூர்த்தி முத்துலக்ஷ்மி வட்டு வடக்கு, சித்தங்கேணி. (ஜே/167 வட்டுக்கோட்டை மேற்கு)

விஷ்ணுசாமி நகுலாம்பிகை பத்தலை வீதி, தொல்புரம், சுழிபுரம். (ஜே/169 தொல்புரம் மேற்கு)

சிவப்பிரகாசம் சிவராஜினி பன்னாகம் தெற்கு, சுழிபுரம். (ஜே/174 சுழிபுரம் கிழக்கு)

ரி. வதனப்பிரியா 44, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (ஜே/177 சித்தங்கேணி)

மகாலிங்கம் மகிந்தன் பழைய தபாலக வீதி, சங்கானை. (ஜே/178 சங்கானை கிழக்கு)

வடிவேலு தர்மபிரபா சந்தை லேன், சங்கானை. (ஜே/180 சங்கானை தெற்கு)

ரி. தயாளினி சத்திய புரம், உடுவில் தெற்கு, சுன்னாகம். (ஜே/182 உடுவில் தென் மேற்கு)

கே. ஜெகதீஸ்வரன் கற்பக பிள்ளையார் கோவிலடி, உடுவில் கிழக்கு. (ஜே/183 உடுவில் தென் கிழக்கு)

ஏ. ஏன்சன் மோகனதாஸ் மல்வம், உடுவில், சுன்னாகம். (ஜே/184 உடுவில் மத்தி)

பி. கலைமதி கருணை வாசம், இணுவில் தெற்கு. (ஜே/188 இணுவில் தென் மேற்கு)

மயில்வாகனம்கேதீஸ்வரன் 'யோகா வாசா' இணுவில் கிழக்கு, இணுவில். (ஜே/189 இணுவில் கிழக்கு)

ஏ. மயூரன் நந்தாவில் லேன், தாவடி, கொக்குவில். (ஜே/193 தாவடி கிழக்கு)

மதிமுகராஜா விஜெயமதி தாவடி வடக்கு, கொக்குவில். (ஜே/194 தாவடி வடக்கு)

ரி. சுதா சுன்னாகம்மேற்கு, சுன்னாகம். (ஜே/193 சுன்னாகம் மேற்கு)

ரி. ஜெயந்தினி, ஜெயாமதி பவனம்' கற்பொக்களை, உடுவில். (ஜே/200, கந்தரோடை)

தம்பிராஜாதயாநிதி, 2ஆம் வட்டாரம், நெடுந்தீவுகிழக்கு ஜே/2, நெடுந்தீவுதெற்கு

சகாதேவன்கோவிந்தராஜன், 5ஆம் வட்டாரம், நெடுந்தீவு, ஜே/5, நெடுந்தீவுகிழக்கு மத்தி

லிங்கநாயகம்ரமணன், 3ம் வட்டாரம், நெடுந்தீவு' ஜே/6, நெடுந்தீவுகிழக்கு

ஜெயசோதிகலையரசி, 6ஆம்வட்டாரம், மண்டைதீவு, ஜே/ 8, மண்டைதீவு மேற்கு)

ஞானப்பிரகாசம்அட்வீசா, 3ஆம்வட்டாரம், அல்லைப்பிட்டி, (ஜே/10, அல்லைப்பிட்டி)

குணநாயகம்உமாதேவி, 5ஆம்வட்டாரம், மண்கும்பான். (ஜே/11, மண்கும்பான்)

நாகமுத்தன்சூரியகலா, 2ஆம்வட்டாரம், வேலணை, ஜே/15, வேலணை தென் கிழக்கு)

ரணசபாபதிரட்ணபாலா, 2ஆம்வட்டாரம், வேலணை, (ஜே/16, வேலணை தெற்கு மத்தி)

நடராஜாநாகேஸ்வரி, 7ஆம் வட்டாரம், அனலைதீவு, (ஜே/37, அனலைதீவு வடக்கு)

பேதுருப்பிள்ளை மரியூக ராஸ்ரா, 4 ஆம் வட்டாரம், எழுவைதீவு, (ஜே/39, எழுவைதீவு)

பத்மநாதன்ஐங்கரன், வாரிவளவு, காரைநகர், (ஜே/40, காரைநகர்மேற்கு)

சோமசுந்தரம்அருளாம்பிகை, கோவலம், காரைநகர், (ஜே/41, காரைநகர் தென் கிழக்கு)

பி. சந்திரகாந்தா இல176, கோவில்வீதி, யாழ்ப்பாணம். (ஜே/77மருதடி)

ஆறுமுகம்விஜயந்தினி, இல15, பலாலி வீதி, 2வது லேன், யாழ்ப்பாணம். (ஜே/79சிராம்பையடி)

நடேசு ஜீவினாஜீவி, பொலிஸ்ரேசன்அருகாமை ஆனைக்கோட்டை, (ஜே/133 ஆனைக்கோட்டை)

பி. ராமேஸ்சுதன் காற்றகோறை, உடுவில், சுன்னாகம், (ஜே/186 உடுவில் வடக்கு)

எஸ். காந்திமதி, சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம். (ஜே/197 சுன்னாகம்கிழக்கு)

எஸ். ஹேமராஜினி, ஏழாலைகிழக்கு, ஏழாலை, (ஜே/204, ஏழாலைகிழக்கு)

நடராஜா ஸ்ரீரஜனி, ஏழாலைவடக்கு, ஏழாலை, (ஜே/205, ஏழாலைவடகது)

எஸ். சிவாஜினி, புன்னாலைக்கட்டுவன்வடக்கு (ஜே/209 ஈவினை)

புண்ணியமூர்த்திநளாயினி பன்னாலை, தெல்லிப்பழை, (ஜே/224பொன்னாலை)

உமாபதிசிவம்பகிரதன், பத்தைமேனி, அச்சுவேலி, (ஜே/281, பத்தைமேனி)

பொன்னம்பலம் சுவாஸ்குமார், குடமியன், வரணி (ஜே/337குடமியன்)

சூரியகுமார்சாரதாதேவி, 12ம்வட்டாரம், புங்குடுதீவு, (ஜே/23, புங்குடுதீவுகிழக்கு)

நடராஜசாந்தினிதேவி, விளானை களாபூமி, காரைநகர், (ஜே/44, காரைநகர்)

சபாரட்ணம் நவமணி, சாந்தம்புலியடி, கரரைநகர், (ஜே/46, கர்ரைநகர்வடக்கு)

கணபதிப்பிள்ளைமகாலக்ஷ்மி, சகாயலி, காரைநகர், (ஜே/47காரைநகர்வட கிழக்கு)

ராசையா ஜெயலக்ஷ்மிகட்டுவன், வீதிமல்லாகம், (ஜே/213, மல்லாகம் மத்தி)

அருளம்பலம் ஜமுனா 184, அரசடி வீதி, கந்தர்மடம். (ஜே-215 அளவெட்டி வடக்கு)

கிருஷ்ணன்ராஜினி ஏ.எம். ரி.எம். பாடசாலை வீதி அளவெட்டி தெற்கு (ஜே 219, அளவெட்டி தெற்கு)

சண்முகநாதன் யோகநாயகி இளவாலை வடக்கு, இளவாலை, (ஜே-221 இளவாலை வடக்கு)

கதிரவேலன் சத்தியாதரன் திருக்குடும்ப கன்னியர் மடம் ''ஏ'' மல்வம், உடுவில் (ஜே-222, இளவாலை வட மேற்கு)

நடராஜா நவலோகன் தாவடி, தெற்கு, கொக்குவில், ஜே-223, வித்தகபுரம்)

ஐ. கிருஷ்ணமூர்த்தி தாவடி தெற்கு, கொக்குவில் (ஜே-227 தெல்லிப்பழை கிழக்கு)

துரைசிங்கம் சசிகலா சிங்கவத்தை, தெல்லிப்பழை கிழக்கு [ஜே-229 துர்க்காபுரம்]

நடராஜா உதயதரன் கே. ஈ. இராமசாமி பாடசாலை லேன், கோண்டாவில் மேற்கு [ஜே-233, காங்கேசன்துறை தெற்கு

நல்லையா சந்திரமதி கைதடி தெற்கு, கைதடி, [ஜே-235 காங்கேசன்துறை தெற்கு]

சீவரெட்ணம் ஜெயந்தினி உடுவில் தெற்கு, சுன்னாகம் (ஜே-240, தென்னமலை)

பத்மநாதன் தாரகா குப்பிளான் வீதி, குரும்பசிட்டி, தெல்லிப்பழை [ஜே-243 குரும்பசிட்டி கிழக்கு]

எமிலியம்பிள்ளை பரமேஸ்வரி மே.பா.எஸ். செல்லத்துரை தொட்டிலடி, சண்டிலிப்பாய், (ஜே-247, தையிட்டி கிழக்கு)

தேவராஜா விக்னேஸ்வரன் மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை, [ஜே-248 [மயிலிட்டித்துறை தெற்கு]

திருச்செல்வம் ஜெயச்சந்திரம் பாடசாலை லேன் கோண்டாவில் மேற்கு [ஜே-249, மயிலிட்டி வடக்கு]

ஜேசுதாசன் மேரி அருள்ராணிலக்ஷ்மிநிலையம், கோப்பாய் சந்தி கோப்பாய்

செல்லத்துரை நந்தகுமாரி பலாலிகிழக்கு [ஜே-254, பலாலி வடக்கு]

ஐயாத்துரை அபிராமிதேவி லக்ஷ்மி வாசா தோப்பு அச்சுவேலி, (ஜே-255 பலாலி வடகிழக்கு)

எஸ். ரவீந்திரன் கலாசாலை வீதி திருநெல்வேலி [ஜே-256, பலாலி மேற்கு]

குணசிங்கம் யோகநந்தி, இல, 26, 4ஆம்குறுக்குத்தெரு, கொழும்புத்துறை, (ஜே/62, கொழும்புத்துறை கிழக்கு)

செல்வநாயகம் சிவபாதசுந்தர் இல15, இலற்றைக்குளம் வீதி கொழும்புத்துறை (ஜே-63, கொழும்புத்துறை மேற்கு)

கே. யூட்மொயன்ற் நான்ஸி 64, புதியவீதி, கொய்யாத்தோட்டம். (ஜே-65, பாஷையூர் மேற்கு)

விஜெயராஜா விக்னேஸ்வரன், 87-32 பிறவுண்வீதி, யாழ்ப்பாணம், (ஜே-80, பசார்)

பாலசுப்பிரமணியம் கவிதா 52-1மானிப்பாய்வீதி, யாழ்ப்பாணம், (ஜே-82, வண்ணார்பண்ணை)

என். மனோஹரன் பீச்றோட், நாவாந்துறை, (ஜே-85, நாவாந்துறை வடக்கு)

எல். ஜெயரதி 235, மானிப்பாய்வீதி, யாழ்ப்பாணம், (ஜே-87மூர்வீதி வடக்கு)

எஸ். சிறிகாந்தன் 524-1 கில்னர்லேன் யாழ்ப்பாணம் (ஜே-88, நியூமோர் ஸ்ரீட்)

செல்லையா ஜெயபாலன் கைதடி மேற்கு கைதடி, (ஜே-293, கைதடிமேற்கு)

சிவசிதம்பரதேசிகர் லம்போதரஜோதி கோயிலாகண்டி, கைதடி, (ஜே-296, கோயிலாக்கண்டி)

தவராஜனி தம்பிராஜா நாவற்குழி தெற்கு கைதடி, (ஜே-297, கைதடி நாவற்குழி)

ராஜேஸ்வரி சட்டநாதர் மறவன்புலோ சாவகச்சேரி, (ஜே-298, மறவன்புலோ)

கோபாலகிருஷ்ணன் நிருபா பெருங்குளம் வீதி சங்கத்தானை, சாவகச்சேரி, (ஜே-300, சாவகச்சேரிநகரம்)

சிவஞானலிங்கம் கபிலன் 4 ஆம் குறுக்குத்தெரு, கச்சாய் வீதி, சாவகச்சேரி, (ஜே-301, கோவில்குடியிருப்பு)

ஸ்ரீஸ்கந்தராஜா பானுமதி மந்துவில் அம்மன்கோவிலடி மீசாலை வடக்கு, மீசாலை (ஜே-304, மந்துவில்.)

கௌரி கந்தலிங்கம் மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி (ஜே-309, கைதடி நுணாவில்)

குமாரசாமி கெங்காதரன் மட்டுவில் தெற்கு சாவகச்சேரி (312, மட்டுவில்மத்தி)

நளினி இராசையா மட்டுவில் வடக்கு சந்திரபுரம், சாவகச்சேரி (ஜே-315 சந்திரபுரம்)

ஜெயாநி ஆறுமுகம் சரசாலை தெற்கு, சாவகச்சேரி (ஜே-316 சரசாலை தெற்கு)

குணநாதன் கிறிஸ்ரில்டா ஜோசப்பின் கச்சாய் வீதி, கொடிகாமம் (ஜே-324. கச்சாய்)

சூரியகுமாரி தங்கராஜா மடத்தடி வீதி, கொடிகாமம், (ஜே-325 பாலாவி)

மைதிலி செல்வராஜா ஸ்ரேசன் றோட் கொடிகாமம் (ஜே-327, கொடிகாமம் மத்தி)

சசிரேகா மாசிலாமணி உசன், மிருசுவில், (ஜே-329, (உசன்

சிவாஜினி சின்னகோன் விடத்தல்பளை, மிருசுவில், (ஜே-331, விடத்தல்பளை)

செல்வரட்ணம் செல்வரதி ரெயில்வேஸ்ரேசன் அருகாமை, எழுதுமட்டுவாள், (ஜே-333 எழுதுமட்டுவாள் தெற்கு)

மார்க்கண்டு விமல்ராஜ் எழுதுமட்டுவாள் வடக்கு, எழுதுமட்டுவாள் (ஜே-334, எழுதுமட்டுவாள் வடக்கு)

ஜேசுதாஸன் ஜெயதிலக் கண்டி வீதி, மிருசுவில், (ஜே-336, மிருசுவில் தெற்கு)

பொன்னையா பிரபாகரன் வரணி வடக்கு, வரணி. (ஜே-338, நாவற்காடு,)

மயில்வாகனம் சசிகரன் தாவலைஇயற்றாலை, கொடிகாமம் (ஜே-344, தாவலை இயற்றாலை)

சிதம்பரப்பிள்ளை யோகமலர் மந்துவில் வடக்கு, கொடிகாமம். (ஜே-347, மந்துவில் வடக்கு.)

## சிறுதானியச் செய்கையில் ஆர்வமில்லை

மந்துவிலில் கால போக அறுவடையின் பின் ஒட்டக்குழி, சின்னக்கலட்டிக் கிராய் போன்ற பகுதிகளில் சிறுதானிய பயிர்ச் செய்கை மக்களால் மேற் கொள்ளப் பட்டுள்ளது. கமநல சேவை நிலையத்தினாலும் விவசாய சம்மேளனத்தினாலும் சிறுதானியப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளுமாறு கேட்ட பொது மக்கள் சிறுதானியப் பயிர்ச் செய்கையில் ஆர்வம் காட்டவில்லை காரணம் கட்டாக்காலி விலங்குகளினதும் குரங்குகளினதும் தொல்லை ஆகும். சிறுதானியத்துக்கு தேவையான விதைகள் கமநலசேவை நிலையத்தினால் வழங்கப் பட்டது. (க-39)

## ஆரம்பப் பணி

[அரியாலை]

யாழ். பழைய பூங்காப் பகுதியில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் கண்ணிவெடி, மிதிவெடி அகற்றும் நடவடிக்கைக்கான ஆரம்பக் கட்டப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. (சி-106)

## அறநெறி பாடசாலை பரிசளிப்புவிழா

(தென்மராட்சி)

நுணாவில் மேற்கு அருள்மிகு ஸ்ரீ வீரபத்திரர் ஆலய பரிபாலன சபை நடாத்தும் அறநெறிப் பாடசாலையின் பரிசளிப்புவிழா அண்மையில் நடைபெற்றது.

பரிபாலன சபைத் தலைவர் எஸ். கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திருவள்ளுவர் சுரபி வித்தகம் பரமசுவாமிகள் ஆசியுரை நிகழ்த்தினார்.

இந்து இளைஞர் பேரவையின் தலைவர் வெ. கெ. தனபாலன் குருகுலக்கல்வியும் அறநெறிப் பயிற்சியும் எனும் விடயம் பற்றி உரையாற்றினார்.

அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (சி-77)

# இளஞ்சந்ததியின் ஒளிமிகுவாழ்வுக்கு முறைசாராகல்விநற்சேவைபுரிகிறது

## பிரதிப் பணிப்பாளர் பெருமிதம்

(அச்சுவேலி)

''இளம்பராயத்து மாணவர்களின் மத்தியில் காணப்படும் விரக்திநிலையை நீக்கி அவர்களுக்குத் தொழிற்பயிற்சிகளை போதித்து அதன் மூலம் எதிர்காலத்தில் நல்ல வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொடுத்து அவர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக முன்னோடியாக முறைசாரக்கல்வி இன்று செயலாற்றி வருகின்றது.''

அண்மையில் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற முறைசாராக் கல்விப்பிரிவினரின் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ் வலய கல்வித்திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் ரி.ஞானாம்பிகை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முறைசாரா பிரிவுஉதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி இ. சண்முகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

''க. பொ. த (சா/த) பரீட்சையில் சித்தியெய்தி இடைவிலகும் மாணவர்களும், பல்கலைக்கழக அனுமதியில் சந்தர்ப்பம் கிடைக்காத மாணவர்களும் வேலைவாய்புகளின்றி விரக்தியடையும் நிலை இன்று இலங்கையில் மேலோங்கியுள்ளது. இதனால் இவர்களின் வாழ்க்கையே சூனியநிலைக்கு தள்ளப்பட்டுவிடுகின்றது. இந்நிலையில் அவரவர் தம் மனோநிலைக்கு ஏற்பஓர் தொழில்நிலை வழிகாட்டியான முறைசாராகல்வி மூலம் தாம்பெற்ற பயிற்சிகளைக் கொண்டு வயது வேறுபாடின்றி அனைவரும் தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

அதுமட்டுமன்றி பிரதேச சூழல் நிலைமைகளுக்கு ஏற்ற அனைவருக்கும் கைகொடுக்கும் துறையான முறைசாராப் பிரிவு மேலும் வளர்ச்சி பெற்று நவீனத்துவமடைவதற்கு யாவரும் பாடுபடவேண்டும். என்றார்.

இவரைத்தொடர்ந்து சிறப்புவிருந்தினராக கலந்துகொண்ட யாழ். கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ். ராஜகோபால் உரையாற்றுகையில்,

இலங்கையில் உள்ளகல்விகற்ற சிறார்களிலே 4 சதவீத மானவர்கள் பல்கலைக்கழகத்திற்குள் பிரவேசிக்க மீதி 96 சதவீதமானோர் தொழில் வாய்ப்புக்களின்றி திண்டாடுகின்றார்கள்.

பள்ளிப்படிப்பு என்பது வெறுமனே தகவல்களை மட்டும்தான் மாணவர்களுக்கு புகட்டுகின்றது. இன்றைய நவீன கணனியுலகிலே முறைசாரக்கல்வி என்பது சர்வதேசக்கல்வியாகவே கருதப்படுவதால் மாணவர்கள் அடையும் பலனும் உச்சநிலையியேயே இருக்கும்'' என்றார். (சி-14)

# பிறப்புப் பதிவில்லாத சிறவர் நிலை: தென்மராட்சி லயன்ஸ் நடவடிக்கை

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்களின் பிறப்புகள் பதியப்படாத நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறுவர்சளின் பிறப்புக்களை தொண்டு அடிப்படையில் பதிந்து சட்ட பூர்வமான பிறப்புச் சான்றிதழ்களைப் பிறப்பு இறப்பு திருமணப் பதிவாளர் அலுவலகம் மூலம் வழங்குவதற்கான முயற்சிகளை சாவகச்சேரி லயன்ஸ் கழகம் தற்போது செய்து வருகின்றது.

அதேசமயம், ஒழுங்கு பேணாத திருமணம் செய்துள்ள பெற்றோர்களுக்கும் பிறந்த பிள்ளைகளுக்கும் கணவன்மார்களால் கைவிடப்பட்ட நிலையில் தாயார்களுடன் வாழ்ந்து வருகின்ற பிள்ளைகளுக்கும் சான்றிதழ்களுக்காவ பதிவுகளை மேற்கொள்வது கஷ்டமான காரியமாகவுள்ளது என கூறப்படுகின்றது.

அத்துடன் பிறப்புச்சான்றிதழ்கள் இல்லாமையினால் இச் சிறுவர்கள் பாடசாலைக் கல்வி பெற முடியாதவர்களாகவுள்ளனர்.

இத்தகைய சிறுவர்கள் பற்றிய விபரங்களை சாவகச்சேரி லயன்ஸ் கழகம் அவ்வப்பகுதி கிராம சேவையாளர்கள் மூலம் தற்போது திரட்டி வருவதுடன் இச்சிறுவர்களின் பெற்றோர்களின் திருமணப்பதிவுகளை இலவசமாகச் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாக கழகத்தின் தலைவர் லயன்ஸ் எஸ். சந்திரகுமார் தெரிவித்தார்.

[சி-77]

### யாழ். மாவட்ட பாடசாலைகளில்

# மனையியல், மரவேலை பாடங்களில் நாட்டம் கொள்வோர் இல்லை

[தென்மராட்சி]

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் இப்போது மனையியல், மரவேலை போன்ற பாடங்களை எவரும் விரும்பிக் கற்பதில்லை எனத் தெரிய வருகின்றது.

பாடசாலைகளில் உள்ள மனையியல் கூடங்களில் செய்முறைப் பரிசோதனைகள் கூட செய்யப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

அதே சமயம் மரவேலை பழகுவதற்கான கூடங்களும் பயன்படுத்தப்படாத நிலையில் இருக்கின்றன. இதன் காரணமாக மரவேலைக்குரிய உபகரணங்கள் பாடசாலைகளில் பயன்படுத்தப் படாத நிலையிலே இருக்கின்றன.

[சி-77]

# விமான விபத்துப் பற்றிய விசாரணைக்கு ரஷ்யக்குழு வரும்

(கொழும்பு)

விபத்துக்குள்ளான ''ஸ்கைகாப் - 702'' என்ற விமானம் தொடர்பான விசாரணைகளை நடாத்துவதற்கென ரஷ்யக்குழு ஒன்று இலங்கை வரவுள்ளது.

தற்போது இவ்விபத்து தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்காக விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் லால்லியனாராய்ச்சி தலைமையிலான விமானச்சேவைகள் தொடர்பான நிபுணர்கள் மூவரடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரி மற்றும் நீர்கொழும்பு பொலிஸார் ஆகியோர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எனினும் விரிவான விசாரணைகளை நடாத்தும் பொருட்டு ரஷ்ய பொறியியலாளர்களைக் கொண்ட குழு இலங்கை வரவுள்ளது.

(சி-9)

# ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையம்

(அரியாலை)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் ஆரம்ப சுகாதாரக் கவனிப்பு நிலையம் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கோப்பாய்ப் பிரிவு அலுவலகத்தில் திறக்கப்படவுள்ளது.

இந் நிலையத்தை புனரமைப்பு செய்வதற்கு மேற்படி சங்க தலைமையகத்தால் ரூபா 50 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இந்நிலையம் மேற்படி சங்க யாழ். கிளையின் கீழ் இயங்க உள்ளதாக அறிய வருகிறது.

(சி-106)

# துயர் களையப்பட வேண்டும் சிவத்தமிழ்ச் செல்வி வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

கடந்த சனிக்கிழமை யாழ். நகரில் நடைபெற்ற பேரணியில் உரையாற்றிய மேலும் சில முக்கியமானவர்களின் உரை இங்கு தரப்படுகின்றது.

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தமது உரையில் தெரிவித்ததாவது:

இவ்வளவு தொகையில் மக்கள் திரண்டுள்ளமையானது எம்மை எழுச்சிகொள்ள வைக்கிறது. இப்பேரணியானது சமாதானத்தை வலியுறுத்துகின்றது. அந்த வகையில் இதை ஏற்பாடு செய்தவர்கள் பாராட்டுக்குரியவர்கள். எமக்கு இன்பம் வேண்டாம். ஆனால் துன்பம் களையப்படவேண்டும். எமது நாட்டைப் பீடித்துள்ள துக்ககரமான சூழ்நிலை நீங்கி சமாதானம் தோன்றுவதற்கு வழிகோலும் இச்செயற்பாட்டை நான் பாராட்டுகிறேன் என்று தெரிவித்தார்.

யாழ். முஸ்லிம் பள்ளிவாசல் மௌலானாவின் பிரதிநிதி கே.எம்.எஸ். ஹமீர் பேசுகையில் தெரிவித்தாவது:

17 வருடகாலமாக இடம்பெறும் போரினால் எந்தவித நன்மையும் எமக்கு இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. உங்களைப் போல் நாங்களும் 83 பேரை இழந்துள்ளோம். இதில் ஒரே குடும்பத்தைச்சேர்ந்த 9 பேர் கொல்லப்பட்டனர் தற்போது எப்படியோ சமாதானம் பூத்திருக்கிறது. இது காயாகி பழமாகி நாம் சாப்பிட வேண்டும் என்றார்.

யாழ்ப்பாணம் நாகவிகாரையின் பிரதம குரு ஞானரத்தின தேரர் இன்று நடைபெறும் போரில் வடக்கிலே இறந்தாலும் தெற்கிலே இறந்தாலும் அது கவலைதரக் கூடிய ஒரு நிகழ்வாகும் சமாதானத்திற்கு நாம்அனைவரும் ஒன்று சேர்ந்து செயற்பட வேண்டும் எனக் கூறினார்.

# முன்பள்ளித் திட்ட புள்ளி விபர திரட்டல் திருப்திகரமாயில்லை?

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நடைபெற்று வருகின்ற முன்பள்ளித் திட்டம் தொடர்பான புள்ளிவிபரங்கள் இதுவரையும் திருப்திகரமாகத் திரட்டப்படவில்லை எனக் கூறப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக அண்மையில் உள்ளூராட்சித் திணைக்களம் அதன் உத்தியோகத்தகர்கள் மூலம் பிரதேச செயலர் பிரிவுகள் நீதியில் திரட்டப்பட்ட புள்ளி விவரங்கள் முழுமையானதாக இருக்கவில்லை. என அரச சார்பற்ற நிறுவனங்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து தற்போது வலயக்கல்வித் திணைக்களங்கள் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மூலம் முன் பள்ளித்திட்டம் தொடர்பான புள்ளி விபரங்களைத் திரட்டி வருவதாகத் தெரியவருகின்றது.

அதேவேளை பிரதேசசெயலர் பிரிவுகள் தோறும் அமைக்கப்பட்டுள்ள முன்பள்ளி ஆசிரியர் சங்கங்களும் இவ்வாறான பணிகளை அதன் அங்கத்தவர்கள் மூலம் திரட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

(சி -77)

# குளிர்த்தி விழா

(அரியாலை)

அளவெட்டி வடக்குதவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய பங்குனி குளிர்த்தி விழா, இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

(செ-106)

# அன்பளிப்பு

[சாவகச்சேரி]

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் காசநோய் தினத்தை முன்னிட்டுசர்வதேசமாவட்டவைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் முப்பத்தொரு காசநோயாளர்களிற்கு துவாய்களை அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

[சி-21]

# செய்தியாளர் (நிருபர்) பதவிக்கான வெற்றிடம்

பின்வரும் இடங்களில் செய்தியாளர்களாகக் கடமையாற்றுவதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

1) மாதகல்
2) சில்லாலை
3) பண்டத்தரிப்பு
4) சுன்னாகம்
5) மல்லாகம்
6) தெல்லிப்பழை
7) கந்தரோடை
8) சுழிபுரம்
9) சங்கானை.

★ கல்வித்தகைமைகள் குறிக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைஇம் மாதம் 27ம் திகதிக்கு முன்பாக

பிரதம ஆசிரியர்
"வலம்புரி"
இல: 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.


# அன்பு வாசகர்களே!

இதோ!

உங்கள் துன்பத்தில் வலம்புரியும் இன்றே இணைந்து கொள்கிறது

உங்கள் உறவுகளின் இழப்பை வெளிப்படுத்தும்

★ மரண அறிவித்தல்கள்
கண்ணீர் அஞ்சலிகள்
வீட்டுக்கிருத்திய அழைப்புகள்
நினைவஞ்சலிகள்

யாவற்றையும் மிகமிகக் குறைந்த கட்டணத்தில் பிரசுரிக்க வலம்புரி காத்திருக்கிறது.

மு. குறிப்பு: வலம்புரியில் மரண அறிவித்தல் பிரசுரிக்கப்படும் போது அதன் 31 ஆம் நாள் நினைவஞ்சலிக்கு விசேட சலுகை வழங்கப்படும்;

ஒல்லும்வா யெல்லாம் வினை
நன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச்
செயல்

- குறள்

# வலம்புரி

## அவலம் போக வழி உண்டா?

உள்ளமும் உடலும் பாதிப்படையாதவிடத்தே ஆரோக்கியம் திகழும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமுமாகும். மனித பெருக்கத்தோடு நோயும் அவனைவாட்டி வதைக்கிறது. ஆனால் நோயுற்றவனை வாட்டி வதைப்பதையே இங்கு சுட்ட விரும்புகிறோம்.

நடைமுறைச் சிக்கல்கள்பல எந்த நிறுவனத்திலும் இருக்கத்தான் செய்யும். ஆனால் சிக்கல்கள் அனுமார் வால்போல நீளக்கூடாதல்லவா. சிக்கல்களைப் போக்கி நிர்வாகத்தைச் சீர் செய்யத்தான் அதிகாரக் கதிரைகள். இல்லை அக்கதிரைகளால் எதனையும் சாதிக்க முடியவில்லையே என்ற நிலை வருமானால் கூறாமல் சந்நியசம் கொள்ள வேண்டியது தான்.

அதிகாரப்பரவலாக்கம் பேசுகிற காலமிது. மத்தியில் எல்லாச் சிக்கல்களையும் சேர்த்து வைத்துச் சீர் அழிக்கக் கூடாது.

யாழ். போதன வைத்தியசாலை கிளினிக்குகளுக்குவரும் நோயாளர்கள் ஐந்நூறுக்கும் மேல் வளர்ந்துள்ளனர். அதிகாலை ஐந்தரைக்கே நாலா புறமும் இருந்து இடம் பிடிக்க வந்து இடர்ப்படுவார்கள். மாலை நாலு மணிக்கே வீடு செல்ல முடியும். இவற்றுக்கிடையில் ஆசன வசதியின்றிய அவலம் ஒருபுறம். அரவணைப்பாரற்ற ஆதரவற்றவர்கள் மயக்க முற்றால் யார் கவனிப்பார்கள்? அதற்கு ஆட்களை வைத்தியசாலையில் வைப்பதில்லைதான். குந்தியிருக்க ஆசனங்கள் போடத்தானே வேண்டும்.

இன்றைக்கு யுத்த அனர்த்தங்களால் சிதைந்த உள்ளங்கள் ஏராளம். அதற்கு மத்தியில்உடல் நோய் உபாதை மறுபுறம் இதனைக் கருத்திற் கொண்டு காருண்யத்தோடு அவர்களை நடாத்த வேண்டும் தானே. நோயாளியைக் கொண்டு செல்லும் படுக்கைக் காவிகள் முச்சக்கர வண்டிகள் இல்லாத அவலம் நிர்வாக அசண்டை கேடாக விசனிக்கத் தோன்றுகிறது.

''இருக்கும் இடம்தேடி என்பசிக்கே அன்னம்'' என்ற சொற்றொடர்கள் மெல்ல வந்து போகின்றன.

- அன்புடன் ஆசிரியர்

# 'மலர்' விற்கும் மங்கையிடம் சேஷ்டை

# புரிந்த மருத்துவ நிபுணர் கைது

(கொழும்பு)

மகப்பேற்று நிபுணர் ஒருவர் யுவதிஒருத்தியுடன் அநாகரிமாக நடந்து கொண்டதாகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சம்பவம் ஒன்று நுவரேலியாவில் நிகழ்ந்துள்ளது.

இது பற்றித்தெரிவிக்கப்படுவதாவதுகொழும்பைச் சேர்ந்த பிரஸ்தாப மகப்பேற்று நிபுணர் தலலந்தனை என்ற இடத்தில் வைத்து மலர் விற்பனை செய்யும் யுவதி ஒருத்தியிடம் கொழும்பிலிருந்து நுவரேலியாசெல்லும் வழியில் தகாதமுறையில் நடந்து கொண்டாராம்.

முகவரி ஒன்றைக் காட்டி யுவதியிடம் விவரம் கேட்ட அவர் இனிப்புகளை யுவதிக்குக் கொடுத்ததுடன் பாலியல் உணர் வைத் தூண்டும் ஆபாசச்சஞ்சிகைகள்சிலவற்றையும்யுவதியிடம்காட்ட முற்பட்டாராம். யுவதியின் தந்தை அப்போது அவ்விடத்திற்க் அவ்வேளை வரவே அகன்ற அவசர்ற்றுநேரத்தின் பின் மீண்டும் யுவதியிடம் வந்து சேஷ்டை புரிய முனைந்தாராம்.

இதனை அவதானித்த ஊரவர்கள் அவரைப் பிடிக்க முற்பட்டபோது தான் வந்த காரில்தப்பி ஓடிவிட்டாராம்.

இது பற்றி நுவரேலியா பொலிஸாரிடம் புகார் செய்யப்பட்டதையடுத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(சி)

## பெண்கள் அறுவர் கைது

(கொழும்பு)

ஹெரோயின்கஞ்சா போன்ற பாதைவஸ்துகளை விற்பனை செய்ததாக பெண்கள் அறுவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தில் நிகழ்ந்துள்ளன.

இப்பிரதேசத்தில் இவ் விற்பனை பரவலாக நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(சி)

## தொலைக்காட்சிப் பெட்டி அன்பளிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கைத்தொழில் வணிக மன்றத்தினர் சர்வதேச காசநோய் தினத்தில் 40000 ரூபா பெறுமதியான கலர்த் தொலைக்காட்சிப் பெட்டியொன்றினையும், அதன் இணைப் பொருட்களையும் அன்பளிப்பாக, சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை காசநோய் பிரிவுக்கு வழங்கியுள்ளனர்.

[சி-21]

## பருத்தித்துறை துறைமுகத்தின் அபிவிருத்திப் பணிகள் தொடர்கின்றன

பருத்தித்துறை துறைமுகத்தைத் திருத்தி புனரமைத்து அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை துறைமுக அபிவிருத்தி அதிகாரசபை மேற் கொண்டுள்ளது.

அடுத்தமாத நடுப் பகுதியில் இத்துறைமுக புனரமைப்பு அபிவிருத்தி வேலைகள் ஆரம்பமாகுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கையையடுத்து கப்பல்களிலிருந்து பொருட்களை இலகுவாக ஏற்றி இறக்க முடியுமென தெரிவிக்கப்படுகிறது.

(க-52)

## வைமன் வீதிச் சீரமைப்பு மூலம் நீண்டநாள் குறை நீங்கியது

(அரியாலை)

நீண்ட காலமாகக் குண்டுங்குழியுமாகக் காணப்பட்ட வைமன் வீதி தற்போது திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மக்கள் எதிர்நோக்கிவந்த சிரமம் முடிவுக்குவந்துள்ளது.

வலிகாமத்தின் ஏனைய பிரதேசங்களில் இருந்து யாழ். நகரிலுள்ள பாடசாலைகள் அலுவலகங்களுக்கு பிரயாணம் மேற்கொள்ளும் மாணவர்களும் உத்தியோகத்தர்களும் இவ் வீதியையே பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வீதியைப் புனரமைக்க வேண்டியதன் அவசியம் பல தரப்பினராலும் வலியுறுத்தப்பட்டு வந்தமை தெரித்ததே.

(சி-106)



## தவக்கால சிந்தனை

### 20 ஆம் நாள்

''இறைவாக்கினர் எவரும் தம் சொந்த ஊரில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை''

பிலாத்து தலைவனாயிருந்து விசாரணை செய்தான், யேசுவின் மீது சுமத்தப்பட்ட குற்றம் ஒன்றுக்கும் ஆதாரம் இல்லை என உணர்ந்தான். அவர் குற்றமற்றவர் என்பது மிகத் தெளிவாயிருந்தது. அவரை விடுதலை செய்ய எண்ணினான் ஆனால் யேசுவை கொலை செய்யும்படி யூதமக்கள் கூக்குரலிட்டனர் பிலாத் தன் பதவிக்கு இடர் உண்டாகுமென அஞ்சி பதற்றமடைந்து மனச்சாட்சிக்கு மாறாக குற்றமற்றவரைக் கொலைக்குத் தீர்ப்பிட்டான்.

இறைவாக்கினரான யேசு தம் சொந்த ஊரில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை ஆனால் அவர் தந்தையின் சித்தத்தை நிறைவேற்றி தம் உயிரையே கையளித்து எமக்கு மீட்பைப் பெற்றுத்தந்தார். கிறீஸ்துவின் வாழ்வை பின்பற்றும் நான் இன்றைய எமது சமூகத்தில் எனக்கு வரும் இன்னல்கள் பழிச் சொற்கள்எந்த மனநிலையுடன் ஏற்றுக் கொள்கிறேன் நான்பணி செய்யும்போதோ சமூகத்தில் வாழும் போதோஎனக்குவரும் அவதூறுகளை எவ்விதம் தாங்கிக் கொள்கிறேன். சிந்திப்போம் நான் கிறீஸ்தவன் எனது கிறீஸ்தவ கடமைகளை அச்சமின்றி நிறைவேற்றி வருகிறேனா? அல்லது நாம் கிறீஸ்தவன் என்று வெளியில் காட்டிக் கொள்ள கூச்சப்படுகிறேனா? எனவே மீட்பைப் பெற்றுத் தந்த கிறீஸ்துவின் பாதையைப் பின்பற்றும் நாம் இன்று முதல் திருந்தி வாழ்வோம் என உறுதி எடுப்போம்.

லூ. மேசி
நாவாந்துறை

# 'உயிரியல் கடிகாரம்' ஆய்வுகள் தரும் தகவல்கள்

பூமி தனது அச்சைப்பற்றி சுழலுவதாலும், அது சூரியனைச் சுற்றி வருவதாலும் சந்திரன் பூமியைச் சுற்றி வருவதாலும் சூழலில் ஆவர்த்தன மாற்றங்கள் ஏற்படுகின்றன. இரவு, பகல் தோன்றுதல், பருவகாலங்கள். பூரணை - அமாவாசை என்பனவும் அவற்றால் விளைந்தவையே இம்மாற்றங்கள் முறையே சூரிய ஒளிச்செறிவு, வெப்பநிலை, வளிமண்டல அமுக்கம், சாரீரப்பதன், நிலா வெளிச் செறிவு என்பவற்றில் ஆவர்த்தனமான ஏற்ற இறக்கங்களை உண்டு பண்ணுகின்றன. ஆவர்த்தனமான ஏற்ற இறக்கங்களை 'சந்தம்' எனவும் அழைக்கலாம். Rhythm இம்மாற்றங்கள் முறையே 24 மணி, 30 நாட்கள், 1 வருடம் என்ற காலங்களையுடைய சந்தங்களாகும். இச் சந்தங்கள் உயிரின வாழ்வில் குறிப்பாக அவற்றின் செயற்பாட்டில் தாக்கத்தை உண்டுபண்ணுகின்றன. உயிரினங்கள் இச் சந்தங்களை வரித்துக் கொண்டு தமது கடிகாரத்தையும், (clock of living nature) தமது கால அட்டவணையையும் (calender of living nature) ஏற்படுத்துகின்றன என கருத இடமுண்டு.

**சந்தத்தின் தாக்கம்**

மனித உடலங்கங்கள் சிக்கலானவையும் கட்டுப்பாடான சுயாதீனமானவையுமான நியம சமநிலையும் ... தன்னிச்சையாக (self - controlled) தொழிற்படக் கூடியனவையுமாகும். ஒவ்வொரு அங்கமும் அதன் கூறுகளின் திடமான தொழிற்பாட்டினாலேயே திறமையாக செயற்படுகிறது.

நீண்டகாலமாக மருத்துவதுறையில் உயிரியல் கடிகாரம் பற்றிய பரிசோதனை தரவுகள் இருந்திருக்கவில்லை. 1931 ஆம் ஆண்டு ஈரலில் உள்ள கிளைக்கோஜனில் ஏற்ற இறக்கம் காணப்படுவது கண்டுபிடிக்கப்பட்ட பின்பே இது பற்றிய ஆராய்ச்சி சூடுபிடிக்கத் தொடங்கியது. நீரிழிவு நோய்க்கு இன்சுலின்கொண்டு மருத்துவம் செய்யும்போது குருதியிலுள்ள சீனியின் அளவில் ஏற்படும் மாறுதல்களையும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். குருதியிலுள்ள சீனியின் அளவு 24 மணித்தியால சந்தத்தினை உடையது. சில நோய்களிற்கான அறிகுறிகள் வெவ்வேறு கால அளவுடைய சந்தங்களையுடையன. இது பற்றிய அறிவு ரோக நிதானத்திற்கு (diagnosing) இன்றியமையாதது. குறித்த அங்கத்தின் சந்தத்தில் மாற்றம் ஏற்படுவதாலோ, அல்லது மாற்றம் ஏற்படுத்துவதனாலோ அது சம்பந்தமான நோய் ஏற்படுவதாக மருத்துவ ஆய்வறிக்கைகள் கோடிகாட்டுகின்றன.

குறித்த நோய் ஒன்றிற்காக மருந்து உட்கொள்ளும் நேரம், அளவு என்பன உயிரினவியல் கடிகாரத்தை அனுசரித்தே மேற்கொள்ளப் படவேண்டும்.

உயிரினவியல் கடிகாரம் பற்றிய விளக்கத்தை அடுத்துவரும் அத்தியாயங்களிலிருந்து பூரணமாக வாசகர்கள் அறிந்து கொள்ளக் கூடியதாயிருக்கும்

அதிகாரம் மருந்து

சுருக்கவுரை:- மருத்துவன் நோயாளனின் தன்மை அளவு, ஏற்றகாலம், இவற்றை ஆராய்ந்து மருந்து செய்யவேண்டும்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக உதைபந்தாட்ட குழுவின் கால அட்டவணையானது குழுவிலுள்ள சிறந்த விளையாட்டு வீரனின் உடலல சந்தத்தினை அடிப்

## வேலாயுதம்பிள்ளை குமுக்டேசன்

உயர் இரத்த அழுத்தம் (hyper tension) மாலையிலும் தாழ்வு இரத்த அழுத்தம் (hypor tension) காலையிலும் ஏற்படுவதனால் அந்நோய்களிற்குரியபரிகாரம்முறையே மாலையிலும், காலையிலும் மேற்கொள்ளப்படுவது சாலச் சிறந்தது.

மருந்து உட்கொள்ளும் காலம் ஓரளவு உயிரினவியல் கடிகாரத்தை ஒட்டியே மேற்கொள்ளப்படுவதாயினும் மருந்தின் அளவு (dosage) சந்தத்தினை - சந்தத்திற்கேற்ப இல்லாதிருப்பது சிந்திக்கத்தக்கது இது மருத்துவர்களுக்கு சமர்ப்பணம்.

உற்றான் அளவும் பிணியளவும் காலமும் கற்றான் கருதிச்செயல் - குறள் (949)

படையாக வைத்தே வகுக்கப்படுகின்றது. 9 நாட்களுக்கு ஒருமுறை அவரின் குதிக்கால் மூட்டுகள் பாதிக்கப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. இதில் ஆச்சரியமான செய்தி என்னவென்றால் வலது கால் பாதிப்பிற்குள்ளாவது செவ்வாய்க்கிழமைகளிலும், புதன் கிழமைகளிலும் இடது கால் வெள்ளிக் கிழமைகளிலும், சனிக்கிழமைகளிலும் என்பதாகும். இச் சந்தம் ஆளுக்கு ஆள் 7 நாட்களிலிருந்து 14 நாட்கள்வரை வேறுபடுவதாக அமைகின்றது.

இது விளையாட்டு வீரர்களுக்கு சமர்ப்பணம்.

# இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னியில் மலேரியா தடுப்புப் பிரச்சாரம்

(வவுனியா)

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதியில் மலேரியா தடுப்புப் பிரச்சார வேலைகள் உலக சுகாதார நிறுவனத்தின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலத்தில் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் மலேரியா நோயின் தாக்கம் அதிகமாகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மலேரியாத் தடுப்பு வேலைகளுக்காக 250 பெட்டிகளில் மலத்தியோனும் வன்னி வைத்தியசாலைக்கான எரிபொருளும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ.ச)

# பெருமாள், சுரேஷ் அணி மோதல்

# வவுனியா செட்டிக்குளத்தில் சம்பவம்

[கொழும்பு]

வவுனியா செட்டிக் குளத்தில் நேற்றுக்காலை ஈபிஆர்எல். எவ் இன் சுரேஷ் அணிக்கும் பெருமாள் அணிக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டதாகத் தெரிய வருகிறது.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது வவுனியா செட்டிக் குளப் பகுதியில் வரதராஜப் பெருமாள் அணியினர் தமது கட்சி அலுவலகத்தை அமைப்பதற்காக அங்கு சென்றதாகவும் அச்சமயம் சுரேஷ் பிரேமச்சந்திரன் அணியினர் அவர்களைத் தடுத்து நிறுத்தியதாகவும் அதன் போது இருசாராருக்குமிடையில் துப்பாக்கிப் பிரயோக மோதல் இடம் பெற்றதாகவும் தெரிய வருகிறது

துப்பாக்கிப் பிரயோகத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் பதட்டம் நிலவியதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. [ந 103]

# திருமலை செயலகமுன் 4வதுநாளாக உண்ணா விரதப் போர் தொடர்கிறது

[திருமலை]

தொண்டராசிரியர்களை நிரந்தரமாக்கக்கோரி வடக்கு கிழக்கு மாகாணசபை அலுவலகம் முன்னால் மறியல் மற்றும் சுழற்சிமுறையில் உண்ணாவிரதமிருந்து வரும் தொண்டராசிரியர்களின் போராட்டம் 4வது நாளாக தொடர்வதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று இரவும் தொடரும் இப்போராட்டத்தில் நேற்று இரவு 40 பெண்கள் உட்பட 100க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் மறியற் போரில் ஈடுபட்டுள்ளனர்,

இதேவேளை வவுனியா மாவட்ட தொண்டராசிரியர்களும் இவர்களுடன் இணையவுள்ளதாகவும் மட்டக்களப்பு தொண்டராசிரியர்கள் மட்டக்களப்பு வலயக் கல்விப்பணிமனையின் முன்பாக எதிர்வரும் புதன்கிழமை தொடக்கம் மறியலில் ஈடுபடப் போவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ-ச-102)

## உப ஜனாதிபதி .,

வார்த்தை நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி தெரிவில் உப ஜனாதிபதி நியமனம் தொடர்பாக தமிழ்க்கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாக தமிழ்க் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

உப ஜனாதிபதி நியமனம் தமிழ் பேசும் மக்களுக்கு பாதுகாப்பளிக்கும் என்று கூறப்படுவதை ஏற்க முடியாது எனவும், அதனால் எந்த விதமான பிரயோசனமும் இல்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணி புளொட், முஸ்லீம் மக்கள் காங்கிரஸ் கட்சி பிரமுகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். [வ]

## கடற்படை...

கடற்படையினர் மேலதிகமாக வந்து மக்களைத் தாக்கியுள்ளதாக தெரியவருகிறது இச்சம்பவத்தை அடுத்து மேலதிகமாக வந்த கடற்படையினர் பொதுமக்களை கண்டபடி தாக்கினர். கடற்படையினர் தாக்குதல் சம்பவத்தினால் 10பொதுமக்கள் காயமடைந்தனர்.

இவ்விபத்து சம்பவம்தொடர் ஆறுகடற் படையினர் மருமருதானைப்பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக நீர்கொழும்பு பொலிஸார் தீவிரபுலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். [வ]

## மட்டக்களப்பில்---

களாக விடுதலைப்புலிகளால் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் விடுதலையானவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது

இதனையடுத்து படையினருடன் சேர்ந்து செயற்பட்டவர் என்றும் இவரின் சடலத்தின் அருகில் தேசத்துரோகத்துக்கான மரண தண்டனை எனும் துண்டுப் பிரசுரம் காணப்படுவதால் புலிகளே இவருக்கு மரண தண்டனை வழங்கியிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுகிலது. [ச-108)

# யாழ்.மத்தியின் இடைநிலைப் பிரிவு மாணவர் தினம் நாளை நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி இடைநிலைப் பிரிவு மாணவர் தினம் நாளை காலை 10மணிக்கு கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெறும்.

செல்வன் தெ. ஹர்சன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்விற்கு மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் வி. பாலசுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளுவார்.

ஆசியுரையை கல்லூரி அதிபர் க. இராசதுரையும் இடைநிலை பிரிவு அறிக்கை உரையை ஆசிரியர் கே. சி. சிவகுமாரனும் நிகழ்த்துவார்

தொடர்ந்து ''முகிழம்'' எனும் சஞ்சிகை வெளியிட்டு வைக்கப்படுவதுடன் கலை நிகழ்வுகளும் இடம் பெறும். [ந]

## அரசியல்...

வார்த்தை தொடர்பாக பூமிபுத்திர கட்சித்தலைவர் ஹரிச்சந்திர விஜயதுங்கா மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஹரிச்சந்திர விஜயதுங்க மேலும் கருத்துத் தெரிவிக்கையில் அரசியல் அமைப்பை மாற்றுவது தொடர்பாக பொதுசன ஐக்கிய முன்னணி அரசும் ஐ. தே. கட்சியும் பேச்சுவார்த்தை நடத்துவது என்பது பயித்தியக்காரத்தனமானது இனப்பிரச்சினையை தீர்க்க இந்த இரு கட்சிகளுக்கும் எந்த விதமான அதிகாரமும்கிடையாது சிங்கள மக்களின் பிர்ச்சினைகளை இரு கட்சிகளும் தீர்க்காமல் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண விளைவது எந்தவித நன்மையையும் தரப்போவதில்லை அரசு கூறுமாப்போல இங்கு இனப்பிரச்சினை என்று ஒன்றுமில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார் (வ)

## அரசு...

அன்ரன் பாலசிங்கம் மூலமாக வெளியிட்டுள்ள கருத்தின் அடிப்படையில் அரசாங்கம் உடனடியாக யுத்த நிறுத்த அறிவிப்பொன்றை வெளியிட வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பேச்சுவார்த்தை தொடர்பான நல்லெண்ண சமிக்ஞையை அரசு இறுதிச் சந்தர்ப்பமாகக் கருதி புலிகளுடனான பேச்சு வார்த்தையை உடன் ஆரம்பிக்க வேண்டும்.

இதனை ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பகாலம் தொட்டு வலியுறுத்தி வருகிறது என்பதை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இந்த நல்லெண்ண சமிக்ஞை தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு தனது நிலைப்பாட்டை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும் என்றும் கருணாசேன கொடித்துவக்கு அரசைக் கேட்டுள்ளா. (வ)

## தாக்குவதை- - -

திகதி முதல் பதிவு செய்யும் சகல வாகனங்களுக்கும் இப் புதிய இலக்கத்தகடு வழங்கப்படவுள்ளதாகவும். இதனால் ஏற்படும் மேலதிக செலவைத்தவிர்க ஒரு இலக்கத்தகட்டுக்கு 900 ரூபா வீதம் அறவிடப்படவுள்ளதாகவும் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ. எச். எம். பௌசி தெரிவித்தார்.

இந்தப் புதிய முறைக்கமைய வடிவமைக்கப்படும் இலக்கத்தகட்டில் இலக்கத்தகட்டுக்கு முன்பாக வாகனத்திற்குரிய மாவட்டத்தைக் குறிக்கும் எழுத்தும் குறிக்கப்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதன் காரணமாக இலக்கத்தகடு தயாரிக்கும்தொழில் பாதிக்கப்பட்டிருப்பதாக கூறப்பட்டாலும் இலங்கை மக்களின் பாதுகாப்பே முக்கியமானது என்றும் புதிய முறை வெற்றிதளிக்கும் பட்சத்தில் ஏனையவாகனங்களிற்கும் இப்புதிய இலக்கத்தகடு வழங்கும் முறை நடைமுறைக்குவரும் என்றும் அமைச்சர் பௌசி மேலும் தெரிவித்தார்.

ஸ்ரீ செல்வா
யாழ். ஸ்ரான்லி வீதி,
காலை 10-30 பி.ப 2.30
பார்த்தீபன்
நடித்த
காக்கைச் சிறகினிலே
குடும்பச் சித்திரம்
நேரடி CD
(புதிய வெளியீடு)
(00115)

## கட்டுநாயக்கா விமான விபத்து

# கறுப்புப் பெட்டி மர்மம் துலங்க ரஷ்ய பொறியியலாளர் குழு வரலாம்?

கடந்த 24ம் திகதி கதிரானப்பகுதியில் விபத்துக்குள்ளான விமானம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நடாத்தும்பொறுப்பை நேற்று குற்றப் புலனாய்வுப் பணியகத்திடம் பொலிஸ் மா அதிபர் லக்கி கொடிதுவக்கு கொடுத்துள்ளார்.

மேற்படி விமானத்தின் கறுப்புப்பெட்டியையும் அவர் குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் கையளித்துள்ளார்

இது தொடர்பான விரிவான விசாரணைகளை நடாத்த ரஷ்ய பொறியியலாளர் குழுவொன்று விரைவில் இலங்கை வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் தலைமையிலான குழுவொன்றும் விசாரணைகளை மேற் கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விமான விபத்தில் கொல்லப்பட்ட 5 ரஷ்யர்களின் சடலங்களும் இன்று ரஷ்யாவிற்கு அனுப்பப்படவுள்ளது. [வ.ச]

## மட்டு. . .

வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொல்லப்பட்டவர்களில் விபத்துக்குள்ளான மினி பஸ்ஸின் சாரதியான இளையதம்பி முருகப்பன் (வயது 54] எஸ். பவித்திரா [வயது 11] யோகராசா டேவிட் திவாகர் [வயது 6] ஆகியோரே பலியானவராவர்.

மட்டக்களப்பில் இருந்து களுவாஞ்சிக்குடி நோக்கிச் சென்ற மினிபஸ் களுவாஞ்சிக்குடியிலிருந்து மட்டக்களப்பு நோக்கிவந்த மினி வானுடன்மோதிய போதே மேற்படி சம்பவம் ஏற்பட்டுள்ளது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில்20பேரும் ஆரயம்பதி வைத்தியசாலையில் 13 பேரும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. [க-60-108[

## விளையாட்டுப் போட்டி

பலாலி ஆசிரியர் கலாசாலை பயிற்சி ஆசிரியர்களிற்கிடையேயான, மென்பந்து கிரிக்கெட் போட்டியும், வலைப்பந்தாட்டப் போட்டியும், இன்று திங்கள் கிழமை பி. ப. 2. 00 மணிக்கு பலாலி ஆசிரியர் கலாசாலையில் நடைபெறவுள்ளது. (செ-42)

★ ★ ★

சங்கானை ஸ்தான அ.மி.த.க.பாடசாலை விளையாட்டு விழா, இன்று திங்கட் கிழமை பி.ப.2.00 மணிக்கு ஓடக்கரை முகாமுக்கு அருகாமையில் உள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் நா.செல்லையா தலைமையில் நடைபெறும்இவ் விழாவிற்கு, வலி மேற்கு பிரதேசாபை தலைவர் ந.திருலோகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (செ)

## புறக்கணிப்பு

கோப்பாய் மத்தியில் பல பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்கப்பட்ட போதிலும் குறிப்பிட்ட சில பகுதிகளுக்கு இது வரை மின்சாரம் வழங்கப்படவில்லை. (சி-79)

# மரண அறிவித்தல்

## S.V. இளையதம்பி

(இளைப்பாறிய ஆசிரியர்)

ஏழாலை வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட S.V. இளையதம்பி 16.3.2000 கொழும்பில் காலமானார். இவர் அன்ன பூரணத்தின். அன்புக் கணவரும் பாஸ்கரலிங்கம் (மருந்தாளர்) சிவஞானவதி [கனடா] ஆகியோரின் பாசமிகு தந்தையும் பார்த்தீபன், யமுனா, யசோ, ஜோதி, றொகான், றொசான் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 18.3.2000 சனிக்கிழமை கொழும்பில் நடை பெற்றது. இத்தகவலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

இ. பாஸ்கரலிங்கம்

வத்தளை.

தொலைபேசி- 077.321945

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல, 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.